# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 25 வியாழக்கிழமை (11-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:287


# ஈழத் தமிழ் குற்றக் கும்பல்களை ஒடுக்க லண்டனில் விசேட பொலீஸ் அதிரடிக்குழு!

லண்டன்,செப்.11

லண்டனில் ஈழத்தமிழ்க் குற்றக் குமபல்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக லண்டனின் குற்றவியல் பொலீஸ் அமைப்பான 'ஸ்கொட் லண்ட்யாட்' விஷேட அதிரடிக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக தமிழ் இளைஞர்கள் குழுக்களாக கொலை, அடிதடி போன்ற வன்முறைகளிலும் 'கிறெடிட் காட்' மோசடி போன்ற குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

'ஸ்கொட்லண்ட்யாட்' அமைப்பின் இந்த விஷேட அதிரடிக்குழு நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து இது தொடர்பான தகவல்களை வெளியிட்டது. சுமார் 80 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் வாழும் லண்டனில் 150 இளைஞர்கள் மட்டும்தான் இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடுவதாக 'ஸ்கொட்லண்ட்யாட்' அமைப்பின் துணை உதவி ஆணையாளர் ஏ்ரெபன் ஹவுஸ் தெரிவித்தார்.

பொதுவாக பிரிட்டனில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் சட்டம் ஒழுங்கை மதித்து நடப்பவர்கள், கல்விமான்கள், கடும் உழைப்பாளிகள் என்பதையும் மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்தினார். இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் பெரும்பாலும் 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் அவர் கூறினார்.





லண்டனில் வன்முறைகளில் ஈடுபடும் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வாள், கத்தி கோடரி, அரிவாள் போன்ற ஆயுதங்களை ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரால் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த காட்சி.

இந்த வன்முறைகள் குறித்து பொலீஸார் நடத்திக் கொண்டிருக்கும் விசாரணைகளில் பலர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களிடமிருந்து, வேறு பல சோதனை நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் நேற்று ஊடகவியலாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. 'சமுராய்' வாள்கள், பலவிதமான கத்திகள், கோடரிகள், அரிவாள்கள் போன்ற ஆயுதங்களுடன் கைத்துப்பாக்கி ஒன்றும் அவற்றில் அடங்கும். இந்தக் குற்றக் கும்பல்கள், வாள், கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களையே அதிகம் பயன்படுத்துகின்றன என்றும் துப்பாக்கி வகைகளை அரிதாகத்தான் பயன்படுத்துகின்றார்கள் என்றும் ஸ்கொட்லண்ட்யாட் உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)

# கொழும்பு மாநாட்டை புலிகள் பகிஷ்கரிப்பு!

## டென்மார்க் தூதர் தமிழ்ச்செல்வனை சந்தித்தார்

கிளிநொச்சி,செப்.11

டென்மார்க் நாட்டு தூதர் மைக்கல் ஸ்ரீன் பேர்க் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியத் தூதரகத்துக்கு வன்னியில் இருந்து கடிதம்

கிளிநொச்சி,செப்ரெம்பர்11

**வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறவிருக்கும் மினி உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.**

**இந்த மாநாட்டை தாங்கள் பகிஷ்கரிப்பதற்கான காரணங்களை விளக்கி விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமையகம் கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றது.**

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டின் தொடர்ச்சியாக இந்த மினி உச்சி மாநாடு கொழும்பில் நடைபெறுகிறது.

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி இந்த மாநாட்டைக் கூட்டுகிறார்.

மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் சமஷ்டியே இலங்கைக்கு ஏற்றது

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,செப்.11

ஜேர்மன் சமஷ்டி முறையே இலங்கைக்கு ஏற்ற மிகப் பொருத்தமான ஆட்சிமுறை. இதை நடைமுறைப்படுத்தும் பொழுது ஏற்படக்கூடிய சிக்கல்களை எழுதப்படாத சட்டங்களைப் பயன்படுத்தி தீர்த்துக்கொள்ளலாம் என்றார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

ஜேர்மன் சமஷ்டிமுறையும் இலங்கையும் என்ற தொனிப்பொருளில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செயலமர்வின் போது. ஆரம்ப உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து 'கொன்றாட் அடினோர் ஸ்டிபுங்' நிறுவனம் இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

அமைச்சர் பீரிஸ் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டி முறையை இன்று விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. சமஷ்டி முறையை தாம் ஏற்றுக்கொள்வதாக விடுதலைப் புலிகள் ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் தெரிவித்துள்ளனர்.

பல்வேறுபட்ட சமஷ்டி முறைகள் உள்ளன. ஆனால், ஜேர்மன் சமஷ்டி முறையில் பல நல்ல அம்சங்கள் அடங்கியிருக்கின்றன.

ஜேர்மன் சமஷ்டி முறையில் பிராந்தியங்களுக்குப் பூரண அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பிராந்தியங்கள் தங்கள் அபிவிருத்தித் திட்டங்களை சுதந்திரமாக செயற்படுத்த முடியும்.

(12ஆம் பக்கம் பார்க்க)



டென்மார்க் நாட்டுத் தூதர் நேற்று கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

## மாநாட்டை புலிகள் பகிஷ்கரிப்பது ஏன்?

### அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் விளக்குவார்

கிளிநொச்சி,செப்.11

ஜப்பானின் விசேடதூதர் யசூசி அகாஷி நாளை கொழும்பில் கூட்டும் மாநாட்டை தாங்கள் பகிஷ்கரிப்பதற்கான காரணத்தை விடுதலைப் புலிகள் அவருக்கு விளக்கவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தம்மைச் சந்தித்துப் பேசவிருக்கும் அகாஷியிடம் இதனை விளக்கிக் கூறுவார்.

அகாஷி இன்று இலங்கைக்கு விஜயம் செய்கிறார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார். (ஐ)

## பாசிக்குடாவில் பொலீஸ் முகாம்: பிரதேச மக்கள் கவலை, முறையீடு!

கொழும்பு,செப்.11

பாசிக்குடாவில் இலங்கைப் பொலீஸார் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர் என்று அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர். இது குறித்து அவர்கள் வாழைச்சேனைப் பிரதேச செயலாளரிடம் முறையிட்டிருக்கின்றனர்.

அங்கு முகாம் அமைக்கப்படுவதால் அப்பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி பாசிக்குடாவுக்கு வரும் சுற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

### அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி ஆட்சி முறை

## அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆலோசனை வழங்க சுவிஸ் தயார்

கொழும்பு,செப்.11


அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி ஆட்சிமுறை ஆகியவை குறித்து இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருப்பதாக சுவிற்ஸர்லாந்து அரசு தெரிவித்திருக்கிறது.

சுவிற்ஸர்லாந்து மத்திய அரசின் வெளிவிவகார அமைச்சு இது தொடர்பாக விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில், இலங்கையின் இன்றைய சமாதான முயற்சிக்கு அரசியல் ரீதியாக உதவ சுவிற்ஸர்லாந்து ஆயத்தமாகவிருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் சமாதான முயற்சி

(12ஆம் பக்கம் பார்க்க).

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



சுவிற்ஸர்லாந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச மாநாடு ஒன்றில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கலந்துகொண்டார். அரசின் சார்பில் சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலகவும் மாநாட்டில் கலந்துகொண்டார். மாநாட்டில் எடுக்கப்பட்ட படம் இது. இந்த மாநாடு இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுடன் நேரடியாகத் தொடர்புடையது அல்ல. (ஐ)

### அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில்

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை புலிகள் உரியவர்களிடம் ஒப்படைப்பு!

அக்கரைப்பற்று,செப்.11

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணாமற்போன நான்கு மோட்டார் சைக்கிள்களை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

மோட்டார் சைக்கிளைக் கையளிக்கும் நிகழ்ச்சி நேற்றுக்காலை 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் த.குயிலின்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி நிஸ்ரோ குஜாலா மற்றும் எச்.எம்.றஷீட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மோட்டார் சைக்கிள் கையளிப்பு நிகழ்ச்சியின் பின்னர் குயிலின்பன் தகவல் தருகையில் -

கடந்த சில மாதங்களாக இப்பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டால், அதன் பழியை சில தீயசக்திகள் விடுதலைப் புலிகளின் மீது சுமத்தி விடுகின்றன என்றும் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுக்கும், தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொல்வதற்கு இந்த நிகழ்வே போதுமானதாகும் என்றும் கூறினார். (ஐ)

## ரெலிகொம் ஊழியரை தாக்கி மோட்டார் சைக்கிள் அபகரிப்பு

### வல்லை வெளியில் அதிகாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.11

அதிகாலைவேளை மோட்டார் சைக்கிளில் தனியே வந்த யாழ்.ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர் ஒருவர் இனந்தெரியாத மூவரால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டார். அவரது மோட்டார் சைக்கிள் அபகரிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை வீதியில், வல்லை வெளியில் இடம்பெற்றது.

கரவெட்டி கிழக்கு பெரியதோட்டத்தைச் சேர்ந்த கே.விஸ்வலிங்கம் (வயது 50) என்பவரே தாக்கப்பட்டார். அடிகாயங்களுக்கு இலக்காகிய இவர், யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

வீதியில் சவுக்கு மரங்களுக்குப் பின்னால் மறைந்திருந்த மூவர் திடீரென வெளிப்பட்டு தன்னை வழிமறித்து தடிகளால் தாக்கினர் என்றும், தாக்கப்பட்டு கீழே வீழ்ந்ததும் 500-5883 இலக்கம் கொண்ட தனது மோட்டார் சைக்கிளை அவர்கள் அபகரித்துக்கொண்டு சென்றனர் எனவும் காயமடைந்தவர் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு இலக்கானவர் தங்க நகைகள் அணிந்திருந்தபோதும் அவற்றை அபகரிக்க முயற்சிக்கவில்லை என்று கூறப்பட்டது.

தாக்குதல் நடத்தியோர் தங்கள் முகத்தை கறுப்புத்துணியால் மூடிக் கட்டியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ-6-139)

## வெடிபொருள்கள் அழிப்பு

கிளிநொச்சி,செப்.11

மன்னார் மாவட்டத்தில் படையினரால் புதைக்கப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டு ஐ.எவ்.எக்ஸ்.டி கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் நேற்றுமுன்தினம் மன்னார் நாயாற்றுவெளியில் வைதது அழிக்கப்பட்டன.

மன்னாரில் 41 ஆயிரத்து 874 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் இருந்து ஆயிரத்து 804 வெடிபொருள்கள் அகற்றப்பட்டிருந்தன. இவையே நேற்றுமுன்தினம் நாயாற்று வெளியில் வைத்து அழிக்கப்பட்டன.

படை நடவடிக்கை காரணமாக 19 கிராமங்களைச் சேர்ந்த 664 குடும்பங்கள் இப்பகுதியிலிருந்து வெளியேறி இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-9)

### 90ஆம் ஆண்டு கைதாகி காணாமற்போன இளைஞர்:

# உரிய விசாரணை நடத்தும் பொறுப்பு அரசுக்கு உண்டு என்கிறது ஐ.நா. குழு

கொழும்பு,செப்.11

1990ஆம் ஆண்டு திருகோணமலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன ஜே. தேவராஜ சர்மாவின் விதி குறித்து ஆக்கபூர்வமான விசாரணை நடத்தும் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு என்று ஐ.நா. மனித உரிமைகள் குழு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

காணாமற்போன இளைஞரின் தந்தையான எஸ்.ஜெயதீஸ்வர சர்மாவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மனு மீதே மனித உரிமைகள் குழு இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

அந்த இளைஞர் இன்னமும் உயிரோடு இருப்பாரேயானால் அவரை விடுவிக்க அரசு போதிய நஷ்டஈடு வழங்கவும் அரசு முன்வரவேண்டும் எனவும் இக்குழு தெரிவித்திருக்கிறது.

அன்புவழிபுரத்தில் கைது செய்யபபட்ட தேவராஜ் சர்மா எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. (ஐ)

## பொன். சிவபாலன் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ். மாநகராட்சியின் முன்னாள் முதல்வர் பொன்சிவபாலனின் 5ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள யாழ். மாவட்டக் கூட்டணித் தலைமையகத்தில் இடம்பெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவஞ்சலி நிகழ்வில் அமரரின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்படும். நினைவுரைகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை -

அமரர் பொன். சிவபாலனின் 5ஆவது நினைவுதின நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இந்நினைவுதின நிகழ்வுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி தலைமை வகிப்பார். (ஐ-8)

### ஒக்கம்பிட்டிய சோதனைச்சாவடி சம்பவம்:

# பொலீஸ் பொறுப்பதிகாரி உட்பட 17 பொலீஸார் உடன் இடமாற்றம்

பதுளை,செப்.11

ஒக்கம்பிட்டிய பொலீஸ் சோதனைச் சாவடியில் கைதான ஒருவர் திடீரென மரணமான சம்பவம் தொடர்பாக இரு ஊர்காவல் படையினரை புத்தளப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை, சோதனைச்சாவடியின் பொறுப்பதிகாரி உட்பட 18 பொலீஸார் நிபந்தனைகளின் பேரில் உடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி கைதான ஒக்கம்பிட்டியைச் சேர்ந்த 49 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான மேற்படி நபர் கடுமையாகத் தாக்கப்பட்டதாலேயே மரணம் சம்பவித்திருக்கிறது என்ற வைத்திய அறிக்கையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

புத்தளம் பொலீஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சந்நிதி தீர்த்தோற்சவம் பக்திபூர்வமாக நடந்தது

யாழ்ப்பாணம்,செப்.11

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச் சந்நிதி ஆலயத்தில் நேற்று தீர்த்த உற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடி தீர்த்தமாடி காவடி எடுத்து அடி அளித்து, கற்பூரச்சட்டி ஏந்தி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியதைக் காணமுடிந்தது.

நூற்றுக்கு மேற்பட்ட காவடிகள் ஏந்தி பக்தர்கள் பரவசமாக ஆடித் தமது நேர்த்தியை நிறைவேற்றினர். 25இற்கு மேற்பட்டோர் பறவைக்காவடி எடுத்து வந்தனர்.

போர்க்குவரத்துச் சபையினரும் தனியார் பஸ் சேவையினரும் விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்திருந்தனர்.

விசேட தொண்டர்கள் ஆலய உட்பகுதியிலும், பொலீஸார் ஆலயத்தின் சூழலிலும் பணியாற்றினர்.

பத்துக்கு மேற்பட்ட மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. (ஐ-3)

## ஊடகவியலாளர் இராசையா காலமானார்



மூத்த ஊடகவியலாளரும், 'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரிய பீட உறுப்பினருமான ஞானப்பிரகாசம் அந்தனி இராசையா( வயது 62) நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

ஆரம்பத்தில்'தினபதி' ஆசிரிய பீடத்தில் பணியாற்றிய இவர், பின்னர் இலங்கை வானொலியின நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றினார். அப்பொழுது 'நாடாளுமன்றத்தில் இன்று' என்ற தலைப்பில் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை அவர் தொகுத்து வழங்கினார்.

திருமணமான இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.(ஐ)

## யாழ்.வலய அதிபர்கள் கூட்டம்

யாழ். கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் பவிக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-8)

### மேல்கொத்மலை திட்டம் முன்னெடுக்கப்பட்டால்

# வடக்கு - கிழக்கில் போன்று மலையகத்திலும் போராட்டம்

### இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் எச்சரிக்கை

கொழும்பு,செப்.11

மேல்கொத்மலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் வடக்கு -கிழக்கில் போன்று மலையகத்திலும் போராட்டம் வெடிக்கும் என்று இ.தொ.கா. தலைவரும் பொதுச் செயலாளரும், வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மலையகத்தில் பாதிப்பை உருவாக்கக் கூடிய திட்டமே மேல்கொத்மலை நீர் மின் திட்டம். இதனால், அதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடமைப்பாடு இ.தொ.கவுக்கு உண்டு.

இத்திட்டத்தினால் இலாபமடையும் சிலர் அதனை முன்னெடுத்துச் செல்ல எத்தனிக்கின்றனர். ஆரம்பத்திலிருந்தே இத்திட்டத்தின் பாதிப்புக்களை உணர்ந்து இ.தொ.கா. எதிர்த்து வருகிறது.

இத்திட்டத்தை நிறுத்துவது குறித்து பிரதமருடன் பேச்சு நடத்திய போது இத்திட்டத்திற்கு உதவி வழங்கும் ஜப்பானிய நாட்டு பிரதிநிதி அகாஷியிடம் பேசி முடிவெடுப்போம் எனறு பிரதமர் கூறினார். அதனாலேயே நாம் இவ்வளவு காலமும் பொறுமையாக இருக்கின்றோம். பிரதமரின் வாக்குறுதியை நாம் மதித்தே நடந்து கொள்கிறோம்.

எதிர்வரும் 15ஆம் திகதி ஜப்பான் விசேட தூதுவர் அகாஷியுடனான சந்திப்பு நடைபெறவிருக்கிறது. இத்திட்டத்தினால் ஏற்படவிருக்கும் பாதிப்புக்களையும் மலையக மக்களின் முழு எதிர்ப்பையும் அவரிடம் தெரியப்படுத்துவோம்

- இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## வேலையற்ற பட்டதாரிகள் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்குமாறு கோரி இன்று நண்பகல் கோட்டை ரயில் நிலையம் எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர். பின்னர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வர்.

உண்ணாவிரதப் போராட்டம் இரு வாரங்களுக்கு மேற்கொள்ளப்படும் எனவும் இக்காலகட்டத்தில் தீர்வு கிடைக்காது போனால் சாகும் வரையிலான உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் எனவும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கங்களின் கூட்டுக்குழுவின் அழைப்பாளர் தெரிவித்திருக்கிறார்.

# இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்கள் பழிவாங்க காஸாவில் விமானக் குண்டுவீச்சு!

டெல்அவிவ்,செப்.11

இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் மற்றும் ஜெருசலேமில் நேற்றுமுன் தினம் மாலை அடுத்தடுத்து நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 17 பேர் கொல்லப்பட்டனர்; முப்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்த இரு குண்டுத் தாக்குதல்களுக்கும் பழிவாங்கும் நோக்கில், காஸாவில் ஹமாஸ் இயக்கத் தலைவர் ஒருவரின் வீட்டைக் குறிவைத்து இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளன.

தலைநகர் டெல்அவிவ் அருகே உள்ள இராணுவ முகாமை குறிவைத்து முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்துள்ளது.

இதில் ஏழு பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியானார்கள். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

இராணுவ முகாமில் இருந்து வீரர்கள் வெளியேறிய சமயம், முகாமின் நுழைவாயிலுக்கு அருகாமையில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் காத்து நின்ற தற்கொலைப் போராளி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்தார்.




ஜெருசலேமில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதி

இதனால், இரண்டு இராணுவத்தினரும், பஸ் தரிப்பிடத்தில் நின்ற 5 பேருமாக ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல் நடந்து சிறிது நேரத்தில் ஜெருசலேமின் மத்திய பகுதியில் உள்ள 'ஹில்எல்' உணவகத்திற்கு முன்பாக இரண்டாவது குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்தது.

இந்தக் குண்டையும் தற்கொலைப் போராளி ஒருவரே வெடிக்க வைத்துள்ளார் என்று இஸ்ரேலிய வட்டாரங்கள் கூறுகின்றன.

உணவகத்தினுள் நுழைய முயன்ற குண்டுதாரியை அங்கு நின்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தடுத்தார் என்றும் - இதனால், குண்டுதாரி வேறு வழியின்றி குண்டை உணவகத்துக்கு வெளியே வெடிக்க வைத்தார் என்றும் - சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

இரண்டாவது குண்டு வெடிப்பில்



டெல்அவிவில் தற்கொலைத் தாக்குதல் நடந்த இடம்.

எட்டுப் பேர் கொல்லப்பட்டனர்; பதினைந்து பேர் காயமடைந்தனர்.

இவ்விரு குண்டுத்தாக்குதல்களையும் வரவேற்றுப் பெருமிதம் அடைந்துள்ள ஹமாஸ் இயக்கம், இஸ்ரேல் தான் புரியும் குற்றச் செயல்களுக்காக வருந்தும் காலம் இது என்று கூறியுள்ளது.

ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவரை இஸ்ரேல் குறிவைத்ததற்கு பழிவாங்கவே இந்த இரு தாக்குதல்களும் நடத்தப்பட்டன என்று அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீன தீவிரவாதிகளின் இத்தகைய குண்டுத் தாக்குதல்கள் மத்திய கிழக்கு சமாதானத்திட்டத்தை அடியோடு குழப்பிவிடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்திருக்கிறது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து காஸாவில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளன.

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் முகமட் ஷகார் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் முகமட் ஷகாரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவராவார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனால், இக் குண்டு வீச்சில் இருபதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர் என்று பலஸ்தீனர்கள் கூறுகின்றனர்.

குண்டுவீச்சுக்கு இலக்காகி சேதமடைந்த முகமட் ஷகாரின் வீட்டை பலஸ்தீன பொலீஸார் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

இந்த வீட்டினுள் ஷகாரின் குடும்பத்தினர் குண்டுவீச்சு நடந்த போது இருந்தனர் என்றும், அவர்களில் மூன்று பேர் இறந்திருக்கலாம் என்றும் செய்திகள் கூறுகின்றன.

## இந்திய விஜயத்தை முன்னதாகவே முடித்துக் கொண்டார் ஷெரோன்

புதுடில்லி,செப்.11

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் திட்டமிட்டதற்கு ஒருநாள் முன்னரே இஸ்ரேல் திரும்பினார்.

ஜெருசலேமில் இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்து 14 பேர் இறந்ததை அடுத்து அவர் நேற்று இஸ்ரேலுக்கு திரும்பினார்.

இதை அடுத்து இந்தியாவில் அவர் கலந்துகொள்ளவிருந்த சில நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டன.

ஷெரோன் கடந்த திங்கட்கிழமை இந்தியாவுக்கு வந்தார். முக்கிய தலைவர்களைச் சந்தித்துவிட்டு, சில நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று விட்டு இன்று நாடு திரும்பவிருந்தார்.

ஆனால், நேற்றே அவர் நாடு திரும்பியதால் மும்பையில் அவர் பங்கேற்கவிருந்த நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டது. (ஒ)

'செப்ரெம்பர் 11' பீதியால்

## அமெரிக்கா முழுவதும் பலத்த பாதுகாப்பு!

நியூயோர்க்,செப்.11

அமெரிக்க உலக வர்த்தக மைய இரட்டைக்கோபுரங்கள் இரண்டு விமானங்களால் தாக்கப்பட்ட இரண்டாவது ஆண்டு நிறைவுதினம் இன்றாகும். இதனை முன்னிட்டு அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் இன்றைய தினம் எங்காவது ஓரிடத்தில் தமது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். என்று எவ்.பி.ஐ. எச்சரிக்கை செய்துள்ளது. ஆனால் தீவிரவாதிகளின் குறி எந்த இடம் என்பது குறித்து அது எதனையும் தெரிவிக்கவில்லை.

இரட்டைக்கோபுரம் தாக்கப்பட்ட இடத்தில் இன்று விஷேட பிரார்த்தனையும், அஞ்சலியும் நடைபெறும்.

இதற்கிடையே -

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட எழுபது பேர், உலக வர்த்தக மையம் மற்றும் விமான சேவை நிறுவனங்களுக்கு எதிராக இழப்பீடு கோரி தாக்கல் செய்த வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆனால், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு இழப்பீடு வழங்குவது எந்தவிதத்திலும் சாத்தியமானதல்ல என்று தெரிவிக்கும் விமான சேவை நிறுவனங்களும்,இரட்டைக் கோபுரத்தின் உரிமையாளர்களான நியூயோர்க் துறைமுக அதிகார சபையும் இந்த வழக்கை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதாகக் கூறியுள்ளன.

தாக்குதல்களை நடத்தியவர்களே இந்த அனர்த்தத்திற்கு இழப்பீடு வழங்கவேண்டும் அதைவிடுத்து எம்மிடம் இழப்பீடு கேட்பது எவ்விதத்தில் நியாயம் என்று அவை கேள்வி எழுப்பியுள்ளன. (ஒ)

## நூறுவயதைக் கடந்தோர் ஜப்பானில் 20 ஆயிரம் பேர்!

டோக்கியோ,செப்.11

ஜப்பானில் நூறு வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை இந்த மாத இறுதியில் இருபது ஆயிரமாக உயரும் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் நூறு வயதைக் கடந்தவர்கள் ஆயிரக்கணக்கில் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் உள்ளனர். அங்குள்ள நூறு வயதைக கடந்தவர்களில் 84.6 சதவீதமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் 1963ஆம் ஆண்டு கணிக்கப்பட்ட புள்ளி விவரத்திற்குப் பின்பு தற்போது மீண்டும் அங்கு முதியவர்கள் குறித்த புள்ளிவிவரம் கணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே மேற்படி தகவல் தெரியவந்துள்ளது.

அத்துடன், உலகிலேயே அதிக வயதுடைய மூதாட்டியும் ஜப்பானில் தான் வசிக்கிறார். 116 வயதுடைய கமாடோ ஹங்கோ என்ற இந்த மூதாட்டி தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக ஜப்பானின் மூத்த மூதாட்டி என்ற பெயரை தக்கவைத்துள்ளார். கின்னஸிலும் இவரது பெயர் பதிவாகியுள்ளது.

இவர் தொடர்ந்து இரண்டு நாள்களுக்கு தூங்குவார். அதேபோல் தொடர்ந்து இரண்டு நாள்களுக்கு விழித்திருப்பார். 79 வயதுடைய தனது மகளின் பராமரிப்பில் இருக்கும் இவருக்கு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன், பேர்த்திகள் என நூற்றுக்கும் மேற்பட்ட வாரிசுகள் உள்ளனர். (ஒ)



ஜப்பானின் மூத்த மூதாட்டியான கமாடோ ஹங்கோ தனது மகள் மற்றும் பேர்த்தியுடன்.

## பாலி குண்டு வெடிப்பு வழக்கு; மற்றொருவருக்கு மரணதண்டனை

ஜகார்த்தா,செப்.11



தீர்ப்பு வாசிக்கப்பட்டபோது இமாம் சமுத்திரா....

பாலி குண்டுவெடிப்பில் சூத்திரதாரிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான இமாம் சமுத்திராவுக்கு நேற்று இந்தோனேஷிய நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பை விதித்துள்ளது.

மரண தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதும் அல்லா-ஹு அக்பர் என்று உரத்த குரலில் நீதிமன்ற நாற்காலியில் அமர்ந்திருந்தவாறு இவர் கத்தினார்.

இவருக்கு துப்பாக்கியால் சுட்டு தண்டனையை நிறைவேற்றுமாறு நீதிபதிகள் குழு உத்தரவிட்டுள்ளது. ஆனால் எப்போது தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை அவர்கள் தமது தீர்ப்பில் தெரிவிக்கவில்லை.

ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்ற 33 வயதான இவர், தான் மாவீரனாக வரவிரும்பினேன் என்றும் ஆனால், எதிர்பாராத விதமாக இந்தோனேஷிய படையினரிடம் அகப்பட்டுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய விசாரணைகளுக்காக நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட இமாம் சமுத்திரா நீதிமன்றக் கட்டடத்தினுள் 'நாத்திகர்களே நீங்கள் நரகத்திற்கு போவீர்கள்' என்று கத்தினார்

இமாம் சமுத்திராவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்போவதாக இவரது சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.

இந்தோனேஷியாவில் மரணதண்டனைகள் விதிக்கப்படுவது அரிது. ஆனால், பாலி குண்டுவெடிப்பின் பின்னர் அங்கு நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனை பதினைந்து பொலீஸாரைக் கொண்ட குழுவினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு நிறைவேற்றப்படும்.

பாலி குண்டு வெடிப்பில் சூத்திரதாரிகளாக கருதப்பட்ட சந்தேகநபர் அம்ரோஸிற்கு கடந்த மாதம் மரணதண்டனை தீர்ப்பு விதிக்கப்பட்டது. சமுத்திரா இந்த வழக்கில் இரண்டாவது சந்தேக நபராக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். (ஒ)

உலக அரங்கில்

## ஈராக்கில் கார்க்குண்டு வெடிப்பு!

பக்தாத்,செப்.11

ஈராக் தலைநகர் பக்தாத்தின் வடபகுதியில் உள்ள ஏர்பில் நகரில் நேற்றுக் கார்க்குண்டு வெடித்ததில் ஈராக்கியர் ஒருவர் கொல்லப்பட்டார்; ஆறு அமெரிக்கப்படையினர் உட்பட 41 படையினர் காயமடைந்தனர்.

'அரச இல்லம்' என்று அழைக்கப்படும் கட்டடத்தில் நடந்த இக் குண்டு வெடிப்பு தொடர்பாக எகிப்திய செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்துள்ளதாவது:-

மேற்படி கட்டடத்தில் குர்திஷ் ஜனநாயகக் கட்சியின் சோதனை நிலையம் உள்ளது. இந்தச் சோதனை நிலையத்தில் நின்ற அமெரிக்கப் படையினரை குறிவைத்தே கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சோதனை நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை படையினர் சோதனை செய்ய முற்பட்டபோதே இந்த அனர்த்தம் நடந்தது என்று தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவின் கண்காணிப்பு விண்கலம்

வாஷிங்ரன்,செப்.11

கடந்த ஆண்டு அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் நடுவானில் வெடித்துச் சிதறியதை தொடர்ந்து அமெரிக்கா விண்வெளிக்கு விண்கலங்களை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது. இப்போது மீண்டும் விண்கலங்களை விண்ணில் செலுத்த தொடங்கியுள்ளது. அமெரிக்க விமானப் படையின் 'மார்ட்டின் டைட்டான்' என்ற விண்கலம் புளோரிடாவின் 'கேப்கனைவரல்' தளத்தில் இருந்து செலுத்தப்பட்டது.

அந்த விண்கலத்தில் கண்காணிப்புச் செயற்கைக்கோள் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. விண்ணில் சுற்றுப் பாதையில் அந்த செயற்கைக்கோள் சுற்றத் தொடங்கியதும் ராணுவத்துக்குத் தேவையான உளவுத் தகவல்களை அது அனுப்பும்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.சேகர், 162, அரசடி வீதி (டயானா கொமினிகேசன் முன்பாக), நல்லூர். T.P. 3146, 0712 347473.

(22416)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும் கனடாவில் பிரஜாவுரிமையுடன் தொழில் புரிபவருமான 33 வயதுடைய சகோதரனுக்கு அவரது அண்ணன் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுள்ள மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார். தொடர்பு: J.B. பிள்ளை C/o பாக்கியநாதன், கிறீன் பாக், 152/2 கோயில் வீதி (I.C.R.C இற்கு எதிராக), யாழ்ப்பாணம்.
T.P 222 - 6563.

(22421)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கார்த்திகை 4ஆம் பாதம், 33 வயதுள்ள, B.Sc. பட்டதாரி ஆசிரியருக்கு அழகிய B.Sc. Maths (Hons) மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு: செ.விஜயரத்தினம், முருகன் திருமணசேவை, மூத்த விநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.

(22470)

### வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட, டாக்டர் குடும்பத்திற்கு சகல வசதிகளுடனும் மருத்துவ பீடத்திற்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P. 222 2982. (22468)

### கைமாறிவிட்டது

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து மாணவர் ஒருவர் மினி பஸ்ஸில் (09-09-2003) வரும்போது விளையாட்டுக்கு அணியும் சப்பாத்துக்கள் அடங்கிய பையை ஒருவரிடம் கொடுத்து விட்டு இறங்கி விட்டார். இப்பையை நுணாவில் மத்தி கோபி தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(22466)

## வான் வாடகைக்கு

15 பேர் பயணஞ்செய்யக்கூடிய நிசான் கரவன் G.A. தொடரிலக்கமுடைய வான் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
* நாள் ஒன்றிற்கு 1600 ரூபாவும் 70 Kmஇற்கு மேல் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் மேலதிக கட்டணமாக 13 ரூபாவும் வாடகையாக அறவிடப்படும்.

தொடர்பு: 0777 555938

(22461) (26-12-13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 08 - 09 - 1927

இறைவன் அடியில் 12 - 08 - 2003

அமரர்

### கந்தையா பொன்னுத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மனிதருள் மாணிக்கமாய் மாநிலத்தில் திகழ்ந்தீர்
புனிதருள் திலகமாய் பூதலத்தில் மகிழ்ந்தீர்
இனியொரு முறை திருமுகத்தைக் காட்டீரோ?
தனிமரமாய் நாங்கள் தவிக்கின்றோம் இங்கே!

இன்று (11.09.2003) வியாழக்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோயிற்குடியிருப்பு,
சாவகச்சேரி. (22465) (25-12-13)

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.மு.பூ.சிவபாதசுந்தரம்

உயரப்புலம், ஆனைக்கோட்டை
J/132 கிராம சேவையாளர்

திரு.மு.பூ.சிவபாதசுந்தரம் அவர்கள் கிராம சேவையாளர் தரம் 1இல் நியமனம் பெற்றதை யிட்டு இவரைப் பாராட்டி மனமகிழ்ந்து வாழ்த்துவதோடு, இவரின் சேவை மேன்மேலும் வளர்ந்து பல்லாண்டு காலம் வாழ அடைக்கல அன்னையின் அருள் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

- ஆனையூர் அன்பர்கள்.

(22464) (24-12-21-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த முப்பத்தைந்து வருட காலமாக அளப்பரிய வங்கிச் சேவையாற்றி எல்லோராலும் 'மகா' என அன்போடு அழைக்கப்படுகின்றவராகிய



### திரு.தம்பிமுத்து மகாராஜன்

அவர்கள் 1968 இல் வங்கிச் சேவையில் சேர்ந்து சிரேஷ்ட காசாளராகப் பதவி உயர்வுபெற்று இன்று 11.09.2003 வியாழக்கிழமைமுதல் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அன்னாரது அளப்பரிய சேவையை நினைந்து எமது இலங்கை வங்கி சுன்னாகம் கிளையின் முகாமையாளரும் ஊழியர்களும் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றோம்.

திரு. தம்பிமுத்து மகாராஜன் அவர்கள் 11.09.1944 இல் அளவெட்டி தெற்கில் பிறந்தார். இவர் அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையின் பழைய மாணவராவார். இவர் தனது வங்கிச் சேவையை பருத்தித்துறை, கொழும்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, மானிப்பாய், காங்கேசன்துறை, சுன்னாகம் ஆகிய கிளைகளில் ஆர்வமுடன் ஆற்றி அவருடைய பிறந்தநாளாகிய இன்றுவரை தனது கடமையை எங்கள் வங்கிக்கும் தனது மண்ணுக்கும் ஆற்றினார். இவர் மக்களுக்கு அரிய பல சேவைகளைத் தொடர்ந்தும் செய்து பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல அளவெட்டி வெளிவயல் முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
சுன்னாகம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்

(22469) (25-12-13-21)

## திருமண அழைப்பு

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 26 ஆம் நாள் (12.09.2003) நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள உத்தராட்டாதி நட்சத்திரமும் சித்த அமிர்த யோகமும் துலாம் லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி நடமுருகையா தம்பதிகள்
(காளிகோவிலடி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.)
அவர்களின் திருநிறை செல்வன்
**மோகனதாசன்**

திரு.திருமதி தம்பித்துரை சற்குணநாதன் தம்பதிகள்
(காளிகோவிலடி, கந்தரோடை)
அவர்களின் திருநிறை செல்வி
**கார்த்திகா**

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் ஓர்சாட் கட்டடம் 7-2/9, 2ஆம் மாடி, காலி வீதி, வெள்ளவத்தையில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மவுண் பன்ரிவேக்ஸ்
40/9, தக்ஷனாராம றோட், கல்கிசை.
Tel: 721338

நொதேன் இஞ்சினியரிங் வேக்ஸ்
250, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு

(22450) (25-12-13-21)

**11.09.2003**

இல்லற வாழ்வில் இணைந்து
இன்று ஓராண்டு நிறைவில் மகிழும் மணமக்களுக்கு
நாம் அன்புடன் வழங்கும்

## திருமண வாழ்த்து

### கேதீஸ்வரன் சியாமினி தம்பதிகள்



இல்லறம் என்னும்
இனிதுற்ற ஓராண்டில்
நல்லறம் தேடி
நலமாய் வாழும்
கேதீஸ்வரன் சியாமினி
தம்பதியினருக்கு
எங்கள் உளங்கனிந்த
திருமணநாள் வாழ்த்துக்கள்!

இவர்களது இல்லத்தில் திருமணநாளை வெகுசிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் சியாமினி தம்பதியினரை வாழ்த்துவோர்:

29/4, பிறவுண் வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (22459) (25-12-13-21)

மணமகன் மணமகள் வீட்டார்,
உறவினர்களும் நண்பர்களும்.

## "நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம்"



மகாவித்துவான் இலக்கண வித்தகர்

### இ.நமசிவாய தேசிகர்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு
மூன்றாண்டு நிறையும் இவ்வேளை
மெய்ப்பொருள் காணும் முயற்சியில்
தம் வாணாளெல்லாம் ஈடுபட்டு
ஞானியாய் விளங்கி, உரையையும்
உரையுந் தொகையும் உயர்த்திய
அப்பெருமகனை,

நெஞ்சம் நெகிழ நினைந்துருகும்;
குடும்பத்தினர்.

அரசடி வைரவர் கோயிலடி,
சுங்கானை. (C-30106) (26-12-13-21)

உதயன்

# செப்ரெம்பர் - 11 தினம் போதிக்கும் பாடங்கள்

இன்று செப்ரெம்பர் 11 ஆம் திகதி.

உலகில் தொடர் உயிர் அழிவுகளுக்கு வித்திட்ட நாளின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் இன்று.

உலக வல்லரசான அமெரிக்காவின் இதயம் என்று கருதப்படும் நியூயோர்க்கில் உலக வர்த்தக மையம் அமைந்துள்ள இரட்டை அடுக்கு மாடிக் கோபுரங்கள், கடத்தப்பட்ட இரு விமானங்களினால் மோதித் தகர்த்ததன் மூலம் மூவாயிரத்திற்கும் அதிகமான அப்பாவிகளின் உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. அதன் இரண்டாம் ஆண்டு நிறைவு இன்று.

சர்வதேச பாதுகாப்பையே தனது தனி உரிமையாக சுவீகரித்து 'சர்வதேச பொலீஸா'கத் தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள அமெரிக்காவின் மையப் பாதுகாப்புக் கேந்திர நிலையமான 'பென்டகன்' மீது கடத்தப்பட்ட விமானம் மோதித் தாக்கிய நாளும் அதுதான்.

அந்தச் சம்பவங்களின் தொடராக இந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறிவிட்டன.

இத்தாக்குதல்களை அடுத்து, சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில், யுத்தப் பிரகடனம் ஒன்றைச் செய்ததன் மூலம் சர்வதேச நாடுகளின் மீது தனது வல்லாதிக்கப்பிடியை - ஆக்கிரமிப்பை இறுக்கத் தொடங்கியது அமெரிக்கா.

செப்ரெம்பர் 11 தாக்குதல்களை நடத்திய 'அல் கெய்டா' தீவிரவாதிகளின் மையத் தலைமையகம் ஆப்கானில் இருப்பதாக அறிவித்த அமெரிக்கா, அங்கு ஆட்சியிலிருந்த தலிபான் அரசுக்கு எதிராகத் தனது இராணுவ வல்லாதிக்கத்தை முதலில் பிரயோகித்தது. காபூலை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின. தலிபான் அரசு அமெரிக்கப் பலாத்காரம் மூலம் கவிழ்க்கப்பட்டது.

அதையடுத்து, அமெரிக்காவின் குறி ஈராக் பக்கம் திரும்பியது. தன்னோடு சேர்ந்த ஒரு சில நாடுகளின் படை உதவிகளையும் சேர்த்துக்கொண்டு கூட்டுப் படை அணி என்ற பெயரில் பெரும் படையெடுப்பு ஒன்றை அமெரிக்கா மேற்கொண்டது. மனித குலத்துக்கு எதிரான பேரழிவு ஆயுதங்களை சதாமின் ஈராக் அரசு வைத்திருக்கின்றது என்ற - என்றுமே நிரூபிக்கப்படாத - ஒரு குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டு இந்த ஆக்கிரமிப்புப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. சதாமின் அரசு கவிழ்ந்தது. ஆனால், சதாமிடம் பேரழிவு தரும் ஆயுதம் ஏதும் இருந்ததாக அமெரிக்காவால் நிரூபிக்க முடியவில்லை.

இந்த இரண்டு ஆண்டு காலத்தில் இரண்டு நாடுகள் மீது தனது இராணுவ வல்லாதிக்கத்தை அமெரிக்கா காட்டியுள்ளது. அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட இரண்டு நாடுகளிலும் இன்றைய நிலை என்ன?

சரியோ, பிழையோ ஆப்கானில் தலிபான்கள் ஸ்திரமான ஆட்சி ஒன்றை நிறுவியிருந்தார்கள். பெரிய அளவில் அபிவிருத்தி இடம்பெறாவிட்டாலும் சட்டம், ஒழுங்கு பேணப்பட்டது.

ஆனால், இன்று அங்கு தலைநகர் காபூலில் மட்டும் தான் அமெரிக்க எடுபிடிகளின் ஆட்சி நிர்வாகம். அங்கும் கூட சட்டம், ஒழுங்கு ஸ்திரமில்லை; அபிவிருத்தி இல்லை; வறுமை தாண்டவம் ஆடுகின்றது. தலைநகருக்கு வெளியே ஆங்காங்கே நிலைகொண்டுள்ள ஆயுதக் குழுக்கள் தத்தமக்கு பிரதேசங்களை வகுத்துக் கொண்டு கூட்டாட்சி புரிகின்றன. 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற நிலைமை. தலைநகருக்கு வெளியே தனது அரச நிர்வாகத்தை விரிவுபடுத்த முடியாது தடுமாறுகின்றார் அதிபர் ஹர்சே.

ஈராக்கிலும் அதுதான் நிலைமை சதாமின் கீழ் கட்டுக்கோப்பாக - ஸ்திரமாக - அரசும் ஆட்சியும் இருந்தன. இன்று ஈராக்கில் ஒழுங்கான நிர்வாகம் இல்லை. உணவு, தண்ணீர், எரிபொருள், மின்சாரம் என்ற அடிப்படை வசதிகளைக் கூட இழந்த நிலையில் அல்லாடுகின்றனர் ஈராக் மக்கள்.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் - ஐ.நா. அங்கீகாரத்தைக் கூடப் பெறமறுத்து - அத்தகைய அங்கீகாரம் அவசியம் என்ற தேவையை உதாசீனம் செய்து - ஈராக் மீது மமதையோடு போர் தொடுத்தது அமெரிக்கா. ஆனால், தான் கைப்பற்றிய ஈராக்கை நிர்வகிக்க முடியாமல் தனது ஆட்சி அதிகாரத்தை அங்கு தக்கவைக்க இயலாமல் அது தடுமாறுகின்றது. ஈராக் விடயத்தில் தான் உதாசீனம் செய்த - உதறித் தள்ளிய - ஐ.நா.வையும் சர்வதேச படைகளையும் வரிந்து - வலிந்து - அழைக்க வேண்டிய இக்கட்டுநிலை அமெரிக்காவுக்கு.

ஒடுக்கப்பட்ட இனங்களின், அடக்கு முறைக்கு எதிரான எழுச்சியை, வேறு சாயம் பூசி, தனது வல்லாதிக்கத்தால் அடக்க முற்பட்ட - அகலக் கால் வைத்த - அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது அதன் விளைவுகளை எதிர்கொள்ள முடியாது தவிக்கின்றது என்பதே உண்மை.

'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்குத் தான் குறிப்பிடும் அர்த்தத்தை, அமெரிக்க ஏகாதிபத்தியம் இனி மேலாவது சீர்செய்து கொள்ளாவிட்டால், இது போன்ற மோசமான விளைவுகளை அமெரிக்காவும் உலக சமூகமும் தொடர்ந்து எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### இனப்பிரச்சினை தீர்வுக்கான விடயத்தில்

# முஸ்லிம் காங்கிரஸ் பொறுமையின் உச்சத்திலுள்ளது என்கிறார் ஹக்கீம்

புத்தளம்,செப்.11

நாம் பொறுமையின் உச்சக் கட்டத்திற்கு வந்துள்ளோம். உடன்படிக்கைகளை செய்யும்போது அதனை இறுக்கமாகச் செய்யவேண்டிய கட்டாயத்திற்கும் ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாடு கடந்த வியாழக்கிழமை புத்தளம் நகர மண்டபத்தில் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம தலைமை தாங்கினார்.

இங்கு உரையாற்றிய அனைவரும் ஒரே கருத்தையே மையமாகக்கொண்டு உரையாற்றினார்கள். எமக்கு அபிவிருத்தி அவசியமில்லை. சேவைகள் செய்யவேண்டியதில்லை. எங்களுக்கு வேண்டியதெல்லாம் கடந்த 18 வருடங்களாக இழக்கப்பட்ட சிறுபான்மை முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மறுபடியும் தரப்படல் வேண்டும். அது முஸ்லிம் காங்கிரஸால் மட்டுமே முடியும் என்பதை வலியுறுத்திப் பேசினார்கள். இக்கோரிக்கைகளுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் தனதுரையில் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

இன்று புத்தளம் தொகுதியில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும் எனக் கோருவதில் எவ்வித தவறும் கிடையாது. அது வேண்டியதுதான். இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தீவிர கவனம் செலுத்தியுள்ளது. மக்களின் அபிலாஷைகள் விரைவில் நிறைவேற்றப்படும்.

இன்றைய அரசியல் நிலைவரத்திலும் பல மாறுதல்கள் ஏற்படலாம் என நினைக்கத் தோன்றுகிறது. பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படாமலே ஆட்சி மாற்றம் ஏற்படலாம் எனப் பலரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

என்னதான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் என்ற துணையுடன் எக்கட்சிக்கும் ஆட்சி செய்வது பெரும் சிரமம்தான். ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு தற்சமயம் இடம் பெறும் நிழல் போராட்டத்தை மு.காங்கிரஸ் வெகு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

நாட்டில் இன்று சமாதானம் பற்றி பிரதானமாகப் பேசப்படுகின்றது. நிரந்தர சமாதானம் ஏற்பட புலிகளுடன் பேச்சு இடம் பெறுகின்றது. எனினும், முஸ்லிம் காங்கிரஸின் உதவியுடன் தான் பூரண சமாதானம் ஏற்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம். நிரந்தர சமாதானம் ஏற்பட்டால்தான் அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். அதற்கு முஸ்லிம் காங்கிரஸின் துணை தேவையாகும்.

இன்று பிரதான கட்சிகளின் பிரதான எதிரியாக முஸ்லிம் காங்கிரஸ் தென்படுகிறது. எனினும், ஆட்சி அமைக்கும்போது நாம்தான் தேவையாகவும் இருக்கின்றோம். எம்மை ஒதுக்கிவிட்டு ஆட்சி அமைக்க நினைப்பது என்பது முடியாத காரியமாகும்.

தற்சமயம் மாகாணசபைத் தேர்தல் ஒன்றை நாம் எதிர்பார்த்துள்ளோம். இத்தேர்தல் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் முக்கியமானதாகும். ஏனெனில், தன்வசமுள்ள மாகாண சபைகளை தக்க வைத்துக்கொள்ள பொ.ஐ.முன்னணி பாடுபடும அதேவேளை, தமது ஆட்சி பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டறிய ஐ.தே.முன்னணி இத்தேர்தலை ஓர் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளும் - என்றார். (ம)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதிகாரப் பகிர்வு அவசியமாகும்!

## ஜே.வி.பியிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்து

கொழும்பு,செப்.11

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்று ஜே.வி.பியுடனான பேச்சின்போது ஈ.பி.டி.பி. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பியின் தகவல் தொடர்புச் செயலாளர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தூதுக்குழுவினர் ஜே.வி.பியின் தூதுக்குழுவினரை சந்தித்துப் பேசியபோது தெளிவாக எடுத்துரைத்தனர். நேற்றுமுன்தினம் காலையில் இடம்பெற்ற இச்சந்திப்பானது தேசிய ரீதியில் அரசியல் கட்சிகளுடன் ஈ.பி.டி.பி. நடத்திவரும் தொடர் அரசியல் பேச்சுகளின் ஓர் அங்கமாகவே இடம்பெற்றது.

இப்பேச்சின்போது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன், அதிகாரப்பகிர்வு அவசியமில்லை என்ற வகையில் கருத்துத் தெரிவித்துவரும் ஜே.வி.பியின் நிலைப்பாடு எதிர்மறையான விளைவுகளையே கொடுக்கும் என்பதைச் சுட்டிக்காட்டிய ஈ.பி.டி.பி. தூதுக்குழுவினர், ஜே.வி.பியினர் இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பான தமது நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

மிகவும் சுமுகமான வகையில் ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றதோடு, தொடர்ந்தும் இத்தகைய சந்திப்புக்கள் நடத்தப்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டது என றும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எச்சரிக்கையைப் புறக்கணிப்பதே மிதிவெடி விபத்துகளுக்குக் காரணம்!

## இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

மிதிவெடிகள் குறித்த அபாய எச்சரிக்கையினைப் பொருட்படுத்தாது அப்பகுதிகளினுள் மக்கள் நடமாடுவதனாலேயே அதிகமான மிதிவெடி விபத்துகள் இடம்பெறுகின்றன.

- இவ்வாறு யாழ். செயலகத்தில் இயங்கும் கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான இணைப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

யுத்த அனர்த்தம் காரணமாக கைவிடப்பட்ட பகுதிகளில் மிதிவெடி குறித்த அபாய எச்சரிக்கை இடப்பட்டுள்ளன. ஆனால், மக்கள் அந்த எச்சரிக்கைகளை உதாசீனப்படுத்துகின்றனர். விறகு வெட்டுவோர் உட்படப் பலரும் பல்வேறு சுயதேவைகளுக்காக மிதிவெடி எச்சரிக்கைகளை பொருட்படுத்தாது அப்பகுதிகளுக்குச் செல்கின்றனர்.

எனவே, மிதிவெடி அபாய எச்சரிக்கை அறிவிப்பு இடப்பட்டுள்ள இடங்கள் தொடர்பாக அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும் - என்றார் அவர்.

(ஏ-6-ரி)

### நாளை

ஆவணி 26
வெள்ளிக்கிழமை
(12.09.2003)
திதி : துதியை
பின்னிரவு 12.17 வரை
நட்சத்திரம்: உத்திரட்டாதி
முன்னிரவு 7.15 வரை
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம்: 10.33-12.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன்னம்பிக்கை அற்றோரின் பாதை தடைக்கல். தன்னம்பிக்கை உள்ளோரின் பாதை படிக்கல்.

# வடக்கு - கிழக்கை பிரிக்குமாறு முஸ்லிம்கள் கோருவது நியாயமில்லை

## பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் கூறுகிறார்

ஏறாவூர்,செப்.11

முஸ்லிம் மக்கள் தமது அரசியல் தனித்துவத்தையும் நலன்களையும் காத்துக் கொள்வதற்காக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமக்கென தனியான நிர்வாக அலகினைக் கோருவதில் நியாயம் உள்ளது. ஆனால், இதற்காகவேண்டி வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிக்குமாறு கோரிக்கைகளை முன்வைப்பதில எவ்வித நியாயமும் இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனித்தனியாகப் பிரிக்குமாறு கோரிக்கைகளை முன்வைப்பது முஸ்லிம் மக்களின் தனித்துவமான அரசியலுக்கு ஆரோக்கியமானது அல்ல.

- இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் வீடமைப்பு பிரதியமைச்சருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஏறாவூர், மீராகேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் யூ.அப்துல் லத்தீப் ஜே.பி. தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதியமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் தமது சொந்த அரசியல் நலன்களுக்காக ஒட்டுமொத்தமாக முஸ்லிம் சமுதாயத்தைப் பலியிடுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கான தீர்வு விடயத்தில் உறுதியான முடிவுகளையும் கோரிக்கைகளையும் முன்வைப்பதற்குப் பதிலாக தமது சொந்த மக்களின் அரசியல் அபிலாசைகளை குழிதோண்டிப் புதைப்பதற்கு முற்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிபந்தனையுடன் இணைக்குமாறும், நிபந்தனையின்றிப் பிரிக்குமாறும், தனியான நிர்வாக அலகைத் தருமாறும் பலவிதமான கோரிக்கைகளை முஸ்லிம்கள் சார்பாக முன்வைப்பது முஸ்லிம் மக்களின் உறுதியான அரசியல் கோரிக்கைக்கு இழைக்கின்ற பாரிய துரோகமாகும் - என்றார். (ம)

# அகாஷி இன்று வருகிறார்

கொழும்பு,செப்.11

ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி இன்று இலங்கைக்கு வருகின்றார். எதிர்வரும் 16ஆம் திகதி வரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார்.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டின் தொடர்ச்சியாக இங்கு கூட்டங்களைக் கூட்டி ஆராய்வது அவரது தற்போதைய விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சமாதானம் மற்றும் மீள்குடியேற்றம், புனரமைப்புச் செயற்பாடுகளைக் கட்டி வளர்க்கும் விடயங்களில் தனது பங்களிப்பைத் தொடர்ந்து அவர் மேற்கொள்வார் என கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகம் தெரிவித்தது.

இப்பணியின் ஒரு கட்டமாக தமது தற்போதைய இலங்கை விஜயத்தின் போது அவர் வடக்கு - கிழக்குக்கு விஜயம் செய்து பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பல்வேறு சமூக, இனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் புலிகளின் அரசியல் தலைமைத்துவத்தையும் சந்திப்பார்.

கொழும்பில் தங்கியிருக்கும் போது ஜனாதிபதி குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அமைச்சர் ஹக்கீம், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர், கண்காணிப்புக்குழுத் தலைவர் டெலவிஸன் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள், சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யும் அவர், அங்கு அமைச்சர் பி.தயாரத்னாவையும், பல்வேறு இனத்தலைவர்களையும் சந்திப்பதோடு அம்பாறையில் உள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்கும் செல்வார்.

கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் தலைமைத்துவத்தை சந்தித்துப் பேசும் அவர், எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்துவார். தமது இலங்கை விஜயத்தின் பெறுபேறுகளை அந்த மாநாட்டின்போது அவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# சுமார் 700 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரத் திட்டம்

## (இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை)

குடாநாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 700 குடும்பங்களுக்கு வீடமைக்கும் திட்டம் ஒன்றை இந்து கலாசார அமைச்சு நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

இந்த வீடமைக்கும் திட்டம் குறித்து யாழ்ப்பாண அரச அதிபருடன் [illegible] தேச செயலாளர்களுடன் நேற்றுமுன்தினம் ஆராய்ந்தனர்.

யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் நடந்த கூட்டத்தில் இத்திட்டம் குறித்து அரச அதிபர் [illegible] இத்திட்டத்தின் [illegible] [illegible]

# 700 அடி பள்ளத்தில் பஸ் வீழ்ந்து 6 பேர் பலி!

## வெலிமடையில் சம்பவம்

உடுபள்ளையிலிருந்து வெலிமடை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்; 38பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் வெலிமடை லோர்க்லிங் தோட்டத்துக்கு அருகே பாதையைவிட்டு விலகிய பஸ் சுமார் 700அடி ஆழமான பள்ளத்தில் கவிழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த 19பேர் நுவரெலியா அரசாங்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வேறு சில பயணிகள் வெலிமடை அரசாங்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் தெரிகிறது.

விபத்துக்கான காரணம் தெரியவில்லை. வெலிமடைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி கிராக இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதிசய தேசிய ஔடதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No-6382) AR/PR/No.228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூக்கடை
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(21-12-13) (குறிப்பு:- சுத்திரச்சந்திக்கு அண்மையில்) (ரி-29974)


## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.Sc. AGRICULTURE (2003/2004)

Application will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna for Admission of Public Officers for Degree Programme to follow B.Sc. Agriculture as internal students for the Academic year 2003/2004.

The applicant should have the following qualifications:-

1. At least 3passes in the following subjects, in the G.C.E. (A/L) Examination at one sitting and minimum requirements for University Admission.
   - (a) Botany
   - (b) Zoology
   - (c) Chemistry
   - (d) Physics
   - (e) Agriculture

OR

Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

Age: Candidate should be less than 45 years of age at the time of closing date.

Application forms may be obtained from the Assistant Registrar, Examination & Admission Branch, University of Jaffna, on a payment of Rs.50/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs. 50/- drawn in favour of the Bursar, University of Jaffna, Thirunelvely and a self addressed stamped envelope (for Rs. 4.50) not less than 9"x4" size.

Date of closing is 30.09.2003

Application should be forwarded through the relevant Heads of Department.

Selected candidates will be called to sit for a written test and an Oral Examination.

No application will be entertained after the closing date.

(C/30085) (20-12-13-21) **REGISTRAR.**

## கேதாரகௌரி அம்மன், கேதாரகௌரி நாதர் கும்பாபிஷேகம்

பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களால் புதிதாக [illegible] கருவிக்கப்பட்ட பெருமானுக்கு நாளை (12-09-2003) வெள்ளிக்கிழமை பகல் 10.28 மணிமுதல் 10.33 மணிவரையான சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் காலை 8 மணிமுதல் 9மணிவரை பால் கொண்டு வந்து பாக்கியம் [illegible].

ஆலயகுரு
பிரம்மஸ்ரீ வா.ஜெனார்த்தனசர்மா

தர்மகர்த்தா,
சி.பரமேஸ்வரன்.

(22282) (20-11-12-21)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித் திங்கள் 26ஆம் நாள் (12.09.2003) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மகேந்திரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பதுமநிதி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் [illegible] பிள்ளையார் கோவிலில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து [illegible] விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ஞானசுந்தரம்
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.த.[illegible]
([illegible])
நீர்வேலி [illegible], நீர்வேலி.

(22303) (20-12-13-21)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் திகதி (12-09-2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 8.58 மணிமுதல் 10.24 மணிவரை (புதிய நேரம்) வரும் துலா லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**திருஞானசம்பந்தர் சுதாஸ்கரன்** (லண்டன்)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**நாகராஜா சியாமினி**
(B.A.சமூகவியல்)
அவர்களுக்கும்

திருமணம் நிறைவேற திருவருள் பாலித்துள்ளதால் அவ்வமயம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைப்பாகை அணிதல்: காலை 7.00 மணி (மணமகன் இல்லத்தில்)
திருமாங்கல்யம் தரித்தல்: காலை 8.58 - 10.24 வரை (மனோன்மணி அம்மன் ஆலய மனோன்மணி மண்டபம், கொக்குவில், நந்தாவில்).
வரவேற்புபசாரம்: 13-09-2003 சனிக்கிழமை பிற்பகல் 4மணி (மணமகன் இல்லத்தில்)

என்பதையும் அறியத்தருகிறோம்

இங்ஙனம் தாங்கள் நல்வரவை நாடும்:

திருதிருமதி வி.திருஞானசம்பந்தர்
இல.18, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P.: 0777 - 6043767

(இருவீட்டார் அழைப்பு)

திருதிருமதி இ.நாகராஜா
இல.60, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(22435)(21-12-13)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (12-09-2003) வெள்ளிக்கிழமை துதியை திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 9.01 மணிமுதல் 10.53 மணிவரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.ஆர்.பாலேந்திரா -
அமரர் திருமதி கௌரி பாலேந்திரா
ஆகியோரின் புத்திரன் திருநிறை செல்வன்
**அரவிந்தன்**
**(கோபி)**



திரு.ஆர்.தர்மலிங்கம் -
திருமதி எஸ்.தர்மலிங்கம்
ஆகியோரின் புத்திரி திருநிறைசெல்வி
**இந்திரா பிரியதர்சினி**
**(இந்து)**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு **வெள்ளவத்தை, மயூராபதி, ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான, சுப்பம்மாள் திருமண மண்டபத்தில்** திருமணம் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

திரு.ஆர்.பாலேந்திரா
532/1A, காலி வீதி,
கொழும்பு - 03.
T.P.: 574331



திரு.திருமதி ஆர்.தர்மலிங்கம்
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
T.P.: 021 - 2263180.

(22326)(21-12-13) (இருவீட்டார் அழைப்பு)

# வன்னியிலிருந்து ஒரு மடல்

கற்பனைப் பாத்திரங்கள் மூலம் யதார்த்த நிலை மற்றும் வரலாற்று நிஜங்களை மனதில் பதிய வைக்கும் நோக்கில் உருவாக்கப்படும் சித்திரங்கள் வாசகர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதுண்டு. தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாறு குறித்து சிங்கள மக்களைச் சிந்திக்கத் தூண்டும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் சிங்கள மொழியில் வெளியிடப்படும் 'தெதுன்ன' மாதாந்த இதழின் 2003 ஜூலை வெளியீட்டிலுள்ள 'வன்னியிலிருந்து ஒரு மடல்' சித்திரத்தின் தமிழாக்கம் இது.

**தமிழில்: வியெஸ்ரி**

[illegible]

தற்போதைக்கு இத்துடன் இக்கடிதத்தை நிறுத்திக்கொள்கிறேன்.

இப்படிக்கு நீ அன்போடு தந்தை போலக் கருதும்

- உன்அப்பா.

## மீண்டும் யுத்தத்துக்குச் செல்லும் எண்ணம் அரசுக்கு இல்லை

### பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன கூறுகிறார்

கொழும்பு,செப்.11

நாட்டின் பாதுகாப்புக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீண்டும் யுத்தத்துக்குச் செல்லும் எந்த ஓர் எண்ணமும் இல்லையென்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறினார்.

இந்த அரசு பொறுப்புடன் நடந்து வருவதால் அது குறித்து அநாவசியமாகக் கலவரமடையாமல் இருக்குமாறு அவர் கோரிக்கையும் விடுத்தார்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் நடைபெறும் கைத்தொழில் கண்காட்சியில் கடந்த ஞாயிறன்று கலந்துகொண்டு பாதுகாப்பு அமைச்சர் உரையாற்றினார்.

எதிரணியின் எப்பொழுதும் [illegible] முன்னர் நிலவிய நாசகார யுத்தத்தில் நாட்டைத் தள்ளிவிடப்போகிறார்கள் என்றும் அதனால் கட்டுக் கதைகளைக் கேட்டு ஏமாறாதிருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் மாரப்பன தொடர்ந்து பேசுகையில், அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான திருமணமாக சமாதானப் பேச்சுக்களை சிலர் வருணிக்கின்றார்கள். ஓடிச்சென்று விவாகரத்து செய்வது எமது எண்ணமில்லை. அந்தத் திருமணம் நீடிக்குமா என்பதை ஆராய்வது புத்திசாலித்தனமானதாகும். இடைக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. புத்தியைப் பயன்படுத்தி நாம் முன்னேறிச் சென்றால் நல்ல பெறுபேறுகளை அடையமுடியும் என்று சொன்னார்.

# 31ஆம் நாள் நினைவுதினம்

பிறப்பு
02 - 01 - 1993

இறப்பு
12 - 08 - 2003



(24-13-12-27)

சிவபதமெய்திய எமது புத்திரி **செல்வி கார்த்தி ஆளினி**

இவரின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (11.09.2003) வியாழக்கிழமை நடைபெறுகின்றன. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்விவளவு, இமையாணன், உடுப்பிட்டி. (சி-30102)

**கா.சிவம் (ஆசிரியர்)**
**குடும்பத்தினர்.**

---

இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 13.09.2003 காலை 9.00 - பி.ப. 5.00 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ். மாநகர சபைப் பகுதி. |
| 20.09.2003 காலை 9.00 - பி.ப. 5.00 | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு, வடமராட்சி. |
| 27.09.2003 காலை 9.00 - பி.ப. 5.00 | இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, கோம்பையன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி. |
| 04.10.2003 காலை 9.00 - பி.ப. 5.00 | வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, பிளாய், மருதனார்மடம், மானிப்பாய், உடுவில், சங்குவேலி, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
(சி-30105) **இலங்கை மின்சார சபை.** (24-12-13-27)

---

# John Keells INSTITUTE

சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற HND கற்கைநெறிக்கான இறுதி அழைப்பு.....

JOHN KEELLS
BTEC HIGHER NATIONAL DIPLOMA IN COMPUTING
**Leading to a B.Sc. (Hons.) degree .....**
Now offered in Jaffna....

- Awarded by Edexcel international UK
- Equivalent to the 1st two years of an International B.Sc. (Hons) degree.
- Final year entry in to University degree programmes around the world.
- Individual attention (only 20 students per batch)
- International course curriculum
- Expert multinational faculty.
- Learning model
- Lending, reference Library and Internet facilities
- Over 1000hrs of guided learning.
- Excellent infrastructure (A/C lecture halls, labs etc.)
- Unlimited practical hrs.
- Focus on Job oriented soft skills.
- Industrial placements.

Only 40 students will have the opportunity this year.

**1st Batch**
**Commences on 12th September 2003**

For more information,
Call now on 222 2831 or
visit us at John Keells Institute - Jaffna Centre
100, Clock Tower Road, Jaffna. (C30103) (27-12-13)

---

## உலகை அதிர .....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலக வர்த்தகமையக் கட்டடத்தின் நிர்மாணவேலைகளை முன்னெடுத்துச் செல்லத் தற்போது ஏற்பட்டுள்ள தடை "மனித குலத்தின் தன்மையை நடத்தையின் மூலமாகவன்றி அவர்களது தூய சிந்தனையின் மூலமே அளவிட முடியும்" என்பதாகும். எவ்வாறாயினும் உலக வர்த்தகமையக் கட்டடத்தின மீது தாக்குதல் இடம்பெற்று இரண்டாண்டுகள் முடிவடையும் இன்றைய தினம் அதனை நினைவுகூரும் பொருட்டு பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அந்நினைவு நாள நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அமெரிக்க அரசுக்குப் பாதகமாக அமைந்த சம்பவம் பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட உலக வர்த்தகமையக் கட்டடத்தின் கோபுர இடிபாடுகளை அப்புறப்படுத்தி அவற்றை ஸ்டடன் தீவில் குவிக்கும் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள எதிர்ப்பாகும்.

சகல சந்தர்ப்பங்களிலும் பயங்கரவாதத்தை எதிர்ப்பதெனக் கூறி அமெரிக்க அரசு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக நோக்கினால் இத்தாக்குதலை அவர்கள் மீது விழுந்த சாட்டையடி எனக் கூறலாம். அபரிமிதமான சுதந்திரத்தை அனுபவித்து வந்த அமெரிக்க மக்கள் தமது சுதந்திரத்தைப் பறிகொடுத்த நினைவு நாளை நினைவுகூரும் நிலை ஏற்பட்டிருப்பது வேடிக்கையானதாகும்.

---

# ஓகன்

**இசை வகுப்பு**
புதிய பிரிவு (சனி, ஞாயிறு)
14.09.2003
மாலை 4 மணிக்கு
ஆரம்பமாகின்றது
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**தூரிகை**
**M.M.V.வீதி,**
**நெல்லியடி.**

---

# கிணற்றில் தவறிவீழ்ந்து சிறுமிகள் இருவர் உயிரிழப்பு

### வவுனியாவின் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் கிணற்றில் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவத்தில் வாணி (வயது 9), அவரது சகோதரியான சுபாசினி (வயது6) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் காலை கடையொன்றிற்குப் பொருள்களை வாங்குவதற்காகச் சென்றவேளை வீதியின் அருகில் காணப்பட்ட கிணற்றில் தவறி விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் உருட்டிச்சென்ற சக்கரம் ஒன்று வீதியைவிட்டு விலகியபோது அதனைப் பிடிக்க முயன்ற சமயம் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்ததாக பார்த்தவர்கள் கூறினர். (ம-168)

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



## செல்வி செலினா ஜெகதீஸ்வரன்

இல.98, ஸ்ரேஷன் றோட்,
கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த
ஜெகதீஸ்வரன் - யசோதா
தம்பதிகளின் செல்வப்புதல்வி

## செல்வி செலினா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (11.09.2003) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

செல்வி செலினாவை அன்பு அப்பா, அம்மா, அக்கா, தட்டாதெரு அரசடி விநாயகர் கோயிலடியிலிருக்கும் அன்பு ஐயா, அம்மம்மா, பிரம்படியிலிருக்கும் அப்பம்மா, மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், தங்கை, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

98, ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு. (22467)(26-12-13-27)

**திரு.ஜெகதீஸ்வரன்**
**(அப்பா)**

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 507 |
| திகதி | 09.09.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4178473-4194731

வெற்றி இலக்கங்கள்
**10 11 15 50**

லக்கினம்
துலாம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,797,250/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 357,001 | 10 | 3,570,010 |
| 2 இலக்கங்கள் | 32,737 | 20 | 654,740 |
| 1 இல + லக்கினம் | 32,462 | 30 | 973,860 |
| 2 இல + லக்கினம் | 3,004 | 100 | 300,400 |
| 3 இலக்கங்கள் | 905 | 500 | 452,500 |
| 3 இல + லக்கினம் | 64 | 5,000 | 320,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 426,177 | - | 6,671,510 |

மொத்தப் பரிசுத், தொகை
ரூபா.6,671,510/-

தொடர் இல. 5176325க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 செப்டெம்பர் 12ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
**4180274-2-73**
**4183082-1-73**
**4192117-6-23**
**4184097-5-45**
**4194369-2-68**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# மக்கள் வங்கியின் 'yes' சேமிப்புக் கணக்கு

இளம் அதிகாரிகளின் நலன்கருதி மக்கள் வங்கி 'yes' என்ற பெயரில் சேமிப்புக் கணக்கொன்றை அறிமுகம செய்துள்ளது.

மக்கள் வங்கி 19 வயதுக்குக் குறைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவின் சமீபத்திய இலங்கைச் சுற்றுலாவுக்கு அனுசரணை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. இளம் அதிகாரிகளின் தேவைகளை அறிந்துகொண்டு அவைகளைப் பூர்த்திசெய்வதோடு, பல கவர்ச்சிகரமான சலுகைகளும் 'yes' சேமிப்புக் கணக்கு மூலம் வழங்கப்படுகின்றன.

இத்தகைய சலுகைகளைச் சமுதாயத்தின் முக்கிய பிரிவான இளம் அதிகாரிகளுக்கு வழங்கும் வங்கிக் கணக்கொன்றை முதல் தடவையாக அறிமுகம் செய்யும் வங்கியென்ற பெருமையை மக்கள் வங்கி பெற்றுக்கொள்கின்றது.

இளம் அதிகாரிகளின் தேவைகள் பற்றி நாடளாவிய ரீதியில் மக்கள் வங்கி மேற்கொண்ட ஆய்வினை அடுத்தே இந்தச் சேமிப்பு கணக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

இளம் அதிகாரிகளின் சரியான தேவைகள் அறியப்பட்டு அவை பூர்த்தி செய்யப்படும் வகையில் இந்தச் சேமிப்புக் கணக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2000 ரூபாவுடன் ஆரம்பிக்கப்படக்கூடியதான இந்த 'yes' சேமிப்புக் கணக்கு கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்குகின்றது. வட்டி மாதாந்தம் வழங்கப்படுவதோடு, வழமையான சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதத்திலும் பார்க்க ஒரு சதவீதம் அதிகமாக வழங்கப்படுகின்றது. 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட நிலுவையைக் கொண்டிருக்கும் கணக்குகளுக்கு கணக்கிலிருந்து கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிலையான கட்டளைகள் இலவசமாக வங்கியினால் மேற்கொள்ளப்படும்.

கணக்கு ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்கள் முடிவடைந்த பின்னர் இலவசமாகக் கடன் அட்டையொன்றும் வழங்கப்படும். கணக்கிலுள்ள நிலுவையைப் பொறுத்து இந்த இலவசக் கடன் அட்டை வழங்கப்படும். இது மட்டுமன்றி கணக்கிலுள்ள நிலுவையின் 10 மடங்குக்கான ஆயுள் காப்புறுதி வங்கியினால் இலவசமாக வழங்கப்படும். மக்கள் வங்கியின் பீபிள்ஸ் லீஸிங் கம்பனி (People Leasing Company) மூலம் சலுகை அடிப்படையிலான குத்தகை வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

இளம் அதிகாரிகளை மேலும் கவரும் நோக்குடன் கடன் வசதிகளையும் மக்கள் வங்கி வழங்கும். கணக்கிலுள்ள நிலுவையின் 10 மடங்கு வரையில் உயர்கல்வி, வர்த்தக அபிவிருத்தி புதிய தொழில் முயற்சி, வீடு வாகனக் கொள்வனவு, கல்விச் சுற்றுலா விடுமுறைகள், குடும்ப நிகழ்வுகள், இயந்திர சாதனம, கணனி, பாவனைப் பொருள் கொள்வனவு போன்ற தேவைகளுக்குக் கடனாக வழங்கும்.

மேலும், தற்போது மக்கள் வங்கியில் நடைமுறையிலுள்ள ஐயஸ்ரீ திட்டத்திற்குள் 'yes' கணக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன.

# தொழில் வளம்





நாளை வெள்ளிக்கிழமை காலை 9.13 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ள வர்த்தக வங்கியின் சுன்னாகம் கிளை அலுவலகம்.

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

## சவர்க்கார உற்பத்திகளின் முன்னோடி சுவதேசி நிறுவனத்திற்கு இணையத்தளம்

சவர்க்கார உற்பத்திகளின் முன்னோடி நிறுவனமான 'சுவதேசி இன்டஸ்றியல் வேக்ஸ்' நிறுவனம் அண்மையில் இணையத்தளமொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இதன் மூலம் இலங்கையர்களுக்கு மட்டுமன்றி சர்வதேச அளவில் வாடிக்கையாளர்களுக்கு இந்த நிறுவனம் பற்றியும் அதன் உற்பத்திகள் பற்றியும் அறிந்துகொள்ளமுடியும்.

www.swadeshiherbal.com என்ற இணைய முகவரியுடன் தொடர்பு கொள்பவர்கள் நிறுவனத்தின் 62 வருடகால அனுபவங்கள், சாதனைகள், அதன் நோக்கங்கள், நடவடிக்கைகள் மற்றும் நிறுவனம் சமூகத்துடன் கொண்டிருக்கும் உறவுகள், அதன் முன் முயற்சிகள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

நிறுவனத்தின் ஏற்றுமதிப் பொருள்களான ராணி சந்தன சவர்க்காரம், ஹேரம்பா எனப்படும் வேப்பம் சவர்க்காரம், ஹேரம்பா பேபி சவர்க்காரம், அப்சரா வெனிவெல் ஆகியன பற்றி அறியமுடியும்.

இந்த உற்பத்திகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மூலிகைகள் பற்றியும் அவற்றின் மருத்துவ இயல்புகள் பற்றியும் இந்த இணையத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வாடிக்கையாளர்களின் அபிப்பிராயங்களை நிறுவனம் புரிந்துகொள்ளவென விசாரணைப் பத்திரமும் இத்தளத்தில் உள்ளது.

சுவதேசி வர்த்தகப் பணிப்பாளர் சூளா சமரசிங்க தெரிவிக்கையில், "சுவதேசி பாரம்பரியம், கலாசாரம், குடும்ப விழுமியங்கள், மூலிகை பற்றிய மரபுவழிக் கருத்துக்கள் என்பனவற்றில் அசையாத நம்பிக்கை கொண்டது. எமது உற்பத்திகளின் பெறுமதியை மேலுயர்த்தி சர்வதேச சந்தையின் பிரபலமான உற்பத்திகளுடன் போட்டியிலீடுபடுவதற்கு எமது இணையத்தளம் உதவும்" என்று கூறினார்.

சுவதேசி நிறுவனம் 1941 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிப் பல சாதனைகளைப் புரிந்துவரும் நிறுவனமாகும்.

## 'ஜெநோவேற்' கிளை இலங்கையில் திறப்பு

சிங்கப்பூரைத் தலைநகரமாகக் கொண்டு இயங்கும் தகவல் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் "ஜெநோவேற் சொலுசன்ஸ்".

இந்நிறுவனத்தின் சர்வதேச ரீதியான விரிவாக்கத்தின் ஓர் அம்சமாக 'ஜெநோவேற்' கிளை இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 'சைபர் சொப்ற்' எனப்படும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் 'CIIT' இதன் பங்காளியாக நியமிக்கப்பட்டுள்ளது. இதனால், "ஜெநோவேற்றின் கூட்டுப் பயிற்சித் திட்டங்களை இலங்கையிலும் பெறக்கூடிய வழி ஏற்பட்டுள்ளது.

## நெல்லியடி மற்றும் சுன்னாகத்தில் வர்த்தக வங்கிக் கிளைகள் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

வர்த்தக வங்கி குடாநாட்டில் இருபுதிய கிளை அலுவலகங்களைத் திறக்கவுள்ளது. நெல்லியடி மற்றும் சுன்னாகம் ஆகிய இடங்களிலேயே இந்தப் புதிய கிளை அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் வர்த்தக வங்கியின் 111ஆவது கிளையாக இன்று வியாழக்கிழமை நெல்லியடியிலும், 112ஆவது கிளையாக நாளை வெள்ளிக்கிழமை சுன்னாகத்திலும் புதிய கிளை அலுவலகங்கள் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன. இத்திறப்பு விழாக்களில் பங்கேற்பதற்காக வர்த்தக வங்கியின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று கொழும்பிலிருந்து யாழ். வந்துள்ளது.

இலங்கையின் முதல்தர வங்கி என்ற விருதை வர்த்தக வங்கி தொடர்ந்து தக்கவைத்துள்ளதாக வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-150-152)

# 4,000 பேரை இராணுவத்தில் சேர்க்கும் திட்டம் பிசுபிசுப்பு; 1,500 பேரே சேர்ந்தனர்

கொழும்பு,செப்.11

4 ஆயிரம் புதியவர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதற்கென கடந்த மாதம் 18ஆம் திகதி முதல் இந்த மாதம் 4ஆம் திகதி வரையில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுக்கு 1,950 பேர் மட்டுமே தோற்றியுள்ளனர். இவர்களில் 1,459 பேர் மட்டுமே இராணுவத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதனால் இந்த முயற்சி தோல்வி கண்டுள்ளது.

இராணுவத் தலைமையக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

இராணுவத்தில் சேருவோரின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்து வருகின்றது என்பதையே இது சுட்டிக்காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

1999ஆம் ஆண்டு 15 ஆயிரம் பேருக்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு 5,326 பேரும் 2000 ஆம் ஆண்டில் 15 ஆயிரம் பேருக்காக நடத்தப்பட்ட தேர்வில் 5,437 பேரும் 2001ஆம் ஆண்டு 10 ஆயிரம் பேருக்காக நடத்தப்பட்ட தேர்வில் 3,775 பேரும் 2002 ஆம் ஆண்டு 10 ஆயிரம் பேருக்காக நடத்தப்பட்ட தேர்வில் 2,503 பேரும் தற்போது 1,459 பேருமே இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.

இராணுவத்தில் இணைபவர்களுக்கு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளபோதும் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் இணைய பெரியளவில் ஆர்வங்காட்டவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதனால் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

இராணுவத்தில் தற்போது 17 ஆயிரம் வெற்றிடங்கள் இருந்தபோதும் அதில் 4ஆயிரம் வெற்றிடங்களை மட்டுமே நிரப்புவதற்கு இந்தமுறை தீர்மானிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நிதி நெருக்கடியே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. (ம)

# இங்கு ஏற்படுத்தப்பட்ட அவலங்கள் மனதில் மாறாத வடுவாகிவிட்டன!

### யாழ். வந்த உளவளத்துணையாளர் வேதனை

வலி.வடக்கு,செப்.11

இந்த மண்ணின் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவலங்கள் என் மனதில் மாறாத வடுவாகப் பதிந்துபோய் விட்டது.

கொழும்பிலிருந்து அண்மையில் யாழ். வந்த குடும்பப் புனர்வாழ்வு நிலைய உளவளத்துணையாளர் ரணவக்க இவ்வாறு வேதனை வெளியிட்டார்.

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தினால் குடும்பப் புனர்வாழ்வு நிலைய அனுசரணையுடன் நடத்தப்பட்ட ஐந்து நாள் வலுவூட்டல் பயிற்சிப் பட்டறையின் நிறைவுநாள் நிகழ்வு சாந்திகம் உளவளத்துணை நிலைய பொறுப்பாளர் திருமதி ர.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ரணவக்க தனது மனவேதனையை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பிலிருந்து வரும்போது வவுனியா வரையிலும் பிரயாணத்தை இலகுவாக மேற்கொள்ளமுடிந்தது. ஆனால், புளியங்குளம் முதல் முகமாலை வரை பயணம் கடினமாகவே அமைந்தது. பல்வேறு சோதனைகளுக்கும் உள்ளாகியே பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

கடந்த 20 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கு ஆவலாக இருந்தேன். இங்குவந்து நேரில் பார்த்தபோது ஆலயங்கள், வீடுகள், தோட்டங்கள் என்று யாவும் அழிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறேன். இது கண்டு எனது மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ள இத்துன்பங்களைப் போன்று எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது. இங்குள்ள மக்கள் எத்தனை பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டு தமது வாழ்க்கையை நகர்த்தியுள்ளனர் என்பதை என்னால் புரியக்கூடியதாக உள்ளது. இந்த மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவலங்கள் எனது மனதில் மாறாத வடுவாகப் பதிந்துள்ளது. அந்த வேதனையுடனேயே நான் சொல்கின்றேன் - என்றார் அவர். (ஓ-86)

# தமிழர்களது வாழ்வில் போர் புறக்கணிக்க முடியாத அம்சம்!

### அரசியல்துறைப் பிரமுகர் உரை

அச்சுவேலி,செப்.11

"தமிழர் வாழ்வில் போர் புறக்கணிக்க முடியாத அம்சமாக மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றித்து வளர்ந்து வந்துள்ளது. இதனைப் பண்டைத் தமிழர் வரலாறும் சமகால ஈழப் போர்களும் வெளிக்காட்டி நிற்கின்றன.

போருக்கு அஞ்சி ஓடியிருந்தால் உலகத்தில் தமிழர் என்று ஓர் இனம் தலைநிமிர்ந்து நில்லாமல் என்றோ அழிந்திருக்கும்.

- இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பிரமுகர் அமுதன்.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெற்ற "நாமார்க்கும் குடியல்லோம்" அரங்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமுதன் மேலும் கூறியதாவது:-

மனித குலத்தின் மேம்பாட்டிற்குப் போர் உதவியாக இருந்துள்ளது. இந்தவகையில், தமிழ் இனத்தின் வளர்ச்சிக்கும் போர் உதவியாக இருந்து வந்துள்ளது.

அன்று போர் நடைபெற்ற முறைகள் முழுமையாக மாறுதல் அடைந்து இன்று நவீன மயப்படுத்தப்பட்ட விஞ்ஞான முறைகளுடன் இணைந்து வளர்ந்து வருகின்றன. விஞ்ஞான மயப்படுத்தப்பட்ட போர் முறைகளை உள்ளடக்கி புலிகளும் வளர்ந்துள்ளனர்.

ஒரு சில ஆயுதங்களுடன் ஆரம்பமான புலிகளின் போர் முறை இன்று உலகமே வியந்து நிற்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. நவீன வசதிகளுடன் 20 ஆயிரம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நீண்டகாலமாக நிலைகொண்டிருந்த பாரிய தளம் ஆனையிறவு இராணுவ முகாம். இதனை இரண்டாயிரம் புலிகள் தாக்கி அழித்தனர். இது புலிகளின் மனோதிடத்தினாலும் நவீன போர் முறை உத்திகளினாலும் கைகூடியது.

முப்பது வருட போரியல் வரலாற்றில் புலிகள் உலகத்தின் பலம் மிக்க தமிழ்ப் படையாக உயர்ந்து நிற்கின்றனர். புலிகளின் பலம் தமிழரின் பலம். நாம் பலமான நிலையில் இருந்து கொண்டு எமது இனத்தையும் எமது பிரதேசத்தையும் பாதுகாப்போம் - என்றார் அவர். (ஓ-11)

# கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் கடந்த வாரம் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ். மாவட்ட மீனவர்களின் நலன்பேணும் வகையில் செயற்படுவதற்கென கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவர் சங்கங்களின் சமாசங்கள் இணைந்தே இச்சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இச்சம்மேளனம் கோயில் வீதியில் உள்ள மாவட்ட கடற்றொழிலாளர் நீரியல் வளத்திணைக்களத்தில் இயங்கிவருகின்றது.

இச்சம்மேளனம் ஏழு பேர் கொண்ட நிர்வாக சபை மூலம் செயற்பட்டு வருகின்றது.

இதில் அனைத்து மீனவர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-12)

## அரைப்போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு 5 மாத சிறை!

தென்மராட்சி,செப்.11

4 டிராம் (அரைப்போத்தல்) கசிப்பு வைத்திருந்த நபருக்கு ஐந்து மாத கடூழியச் சிறைத்தண்டனையை சாவகச்சேரி நீதிவான் வழங்கினார்.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சுரேஷ்குமார் என்பவருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டது.

கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக ஏற்கனவே 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு நீதிமன்றினால் இந்த நபர் எச்சரிக்கை செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-117)

# சமகால அரசியல் தொடர்பாக வவுனியாவில் புலிகள் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.11

சமகால அரசியல் நிலைப்பாடு தன் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அடங்கிய குழுவினர் வவுனியாவில் விளக்கமளித்து வருகின்றனர்.

வவுனியா மாவட்ட அரச அதிகாரிகளை இக்குழுவினர் சந்தித்து விளக்கமளித்ததுடன் -

வவுனியா மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களையும் இவர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர். (ம-9-164)

# பங்களாதேஷுடனான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 137 ஓட்டங்களால் வெற்றி

பங்களாதேஷ் அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 137 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நேற்று முன்தினம் முல்தான் நகரில் இப்போட்டி நடைபெற்றது. பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்ஸமாம் உல்ஹக், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றார். அதையடுத்து பாக். அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான மொஹமட் ஹாபிஸ், 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின் பங்களாதேஷ் அணியின் இன்ஸமாம் ஒருநாள் போட்டிகளில் 9,000 ஆவது ஓட்டத்தையும் நேற்றுமுன்தினம் கடந்தார்.

50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது பாகிஸ்தான் அணி.

பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களில் அலோக் கபாலி மாத்திரம் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

324 ஓட்டங்கள் என்ற பிரமாண்ட இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி ஆரம்பத்திலிருந்தே தடுமாறியது.

முதலாவது ஓவரில் மொஹமட் அஷ்ரபுல் ஓட்டமெதுவுமின்றி ஆட்டமிழந்தார். 8ஆவது ஓவரில் ஹபிபுல் பஷர் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

## விளையாட்டு

பந்துவீச்சு துவம்சம் செய்யப்பட்டது.

சர்வதேச போட்டியொன்றில் முதல் தடவையாக ஆரம்பத்துடுப்பாட்டக் காரராகக் களமிறங்கிய யாஸிர் ஹமீட், 132 பந்துவீச்சுக்களில் 116 ஓட்டங்களைக் குவித்தார். இவற்றுள் 2 சிக்ஸர்கள், 14 பௌண்டரிகளும் அடங்கும்.

யூஸுப் யுஹானா, 9 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் இன்ஸமாம் உல்ஹக் 48 பந்துவீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், யூனுஸ்கான் 31 பந்துவீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதியில் 43.21 ஓவர்களில் 186 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது பங்களாதேஷ் அணி.

அப்துல் ரஸாக் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும். மொஹமட் ஹாபிஸ் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக யாஸிர் ஹமீட் தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட இத் தொடரின் இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.


ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

## 21 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 20 - 06 - 1924



உதிர்வு 22 - 08 - 2003

அமரர்

### வைரமுத்து காசிப்பிள்ளை

எங்கள் வாழ்வின் ஒளி விளக்கே
எமது வாழ்வை வளமாக்க
அல்லும் பகலும் பாடுபட்ட
அன்புத் தெய்வமே!
எங்கள் இதயத்தில் உங்கள்
நினைவலைகள் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(22474)(26-16-17)



## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில் 13 - 12 - 1978



தாயக மண்ணில் 14 - 06 - 2003

### கடற்புலி மேஜர் வள்ளுவன்

(கந்தசாமி விஜிதன், மூர்த்தி வளவு - தெல்லிப்பழை)

தமிழீழ மண் மீட்கவென்று தலைவன் வழியில் தடம் பதித்தாய்
கடல் அன்னையின் மடியில் பன்னிரு வேங்கையுடன் சங்கமித்தாய்!

கடந்த 14.06.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பலைத் தாக்கியழித்த போது வீரகாவியமான எமது செல்வத்தின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்த போராளிகள் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (11.09.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைப்பதோடு, அன்று காவியமான ஏனைய போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

என்றும் உம் நினைவுடன்: குடும்பத்தினர்.

தேவாலய வீதி, சங்கானை. (22471)(25-16-17)


# விளையாட்டு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.11

கைதடி மத்தி, வளர்மதி விளையாட்டுக் கழக வளர்ச்சிக்காக கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம், கைதடி நாவற்குழி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டி இன்று முதல் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு,

மாலை 4.30 மணி - கைதடி துர்க்கா வி.க. 'பி' அணி எதிர் கைதடி நவசக்தி வி.க. 'ஏ' அணி.

மாலை 5.30 மணி - நாவற்குழி சரஸ்வதி வி.க. 'ஏ' அணி எதிர் கைதடி குமரநகர் வி.க. 'ஏ' அணி. (ஒ-5-75)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.11

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுக்கள் நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டம் நாளை முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரையும் கரப்பந்தாட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்திலும், வலைப்பந்தாட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை வட்டு. மத்திய கல்லூரி மைதானத்திலும், கிளித்தட்டு 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை.

அராலி இந்துக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

அராலி இந்துக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.11

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியவற்றின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்கள் விவரம்,

**16 வயதுப் பிரிவு**

மாதகல் சென்.ஜோசெப் வித்தியாலயம் எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி.வித்தியாலயம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி.

**14 வயதுப் பிரிவு**

நவாலி மகாவித்தியாலயம் எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி.வித்தியாலம்.

புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்கள்,

**14 வயதுப் பிரிவு**

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

ஆனைக்கோட்டை ஆர்.சி.வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி. (ஒ-5-132)

# ஊக்கமருந்து விடயத்தில் கெல்லி வைட் குற்றவாளி

9ஆவது உலக மெய்வன்மைப் போட்டிகளில் இரு தங்கப்பதக்கங்களை வென்ற அமெரிக்க வீராங்கனை கெல்லி வைட், ஊக்கமருந்து விவகாரத்தில் குற்றவாளி என சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனங்களின் சங்கம் (ஐ.ஏ.ஏ.எவ்.) அறிவித்துள்ளது.

பாரிஸில் கடந்த மாதம் நடைபெற்ற 9 ஆவது உலக மெய்வன்மைப் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்திலும் 200 மீற்றர் ஓட்டத்திலும் தங்கப் பதக்கத்தை வென்றார் கெல்லி வைட்.

100 மீற்றர் இறுதிப்போட்டியின் பின்னர் அவரிடமிருந்து பெறப்பட்ட சிறுநீரில் 'மொடோபினில்' எனும் ஊக்கமருந்து காணப்பட்டது. சர்ச்சைக்குரிய இம்மருந்தை 'நார்கோல்ஸ்பி எனும் உபாதைக்கு நிவாரணமாக மருத்துவரின் அறிவுறுத்தலின் பேரில் பாவித்தேன்' என கெல்லி வைட் கூறினார்.

இது தொடர்பான ஆவணங்களைக் சமர்ப்பித்து விளக்கமளிப்பதற்கு கடந்த செவ்வாய்க்கிழமைவரை கெல்லிவைட்டுக்கு ஐ.ஏ.ஏ.எவ். அவகாசம் வழங்கியது.

எனினும், இம்மருந்தை பாவித்தமைக்கு அவர் கூறிய காரணத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என செவ்வாயன்று ஐ.ஏ.ஏ.எவ். அறிவித்தது. இம்மருந்துச் செயற்பாடுகளை அதிகரிக்கும் ஊக்கியென எமது நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு ஐ.ஏ.ஏ.எவ். பொதுச் செயலாளர் இஸ்டவன் கியூலாய் கூறினார்.

இதனால், கெல்லி வைட் பெற்ற இரு தங்கப்பதக்கங்களும் பறிக்கப்படுவதுடன், இப்போட்டிகளில் பரிசுப் பணமாகப் பெற்ற ஒரு கோடியே 20 லட்ச ரூபா பரிசுப் பணத்தையும் இழக்க நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கெல்லிவைட் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அமெரிக்க தடகள சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தடகள சங்கம் கெல்லி வைட் மீது நடவடிக்கை மேற்கொண்டு அவரின் பதக்கங்களைப் பறிக்கத் தவறினால், இவ்விவகாரத்தை சுவிட்ஸர்லாந்திலுள்ள விளையாட்டுச் சர்ச்சைகளுக்கான நீதிமன்றத்திற்கு ஐ.ஏ.ஏ.எவ்.கொண்டு செல்லவுள்ளது.


## வேலையாள்கள் தேவை

பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை

1. காசாளர் (ஆண்)
2. கணக்காளர் (ஆண்)
3. விற்பனை உதவியாளர்கள் (ஆண்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேர்முகப்பரீட்சை சனிக்கிழமை (13/09/2003) காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும்.

**நல்லி சில்க்ஸ்,**
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-30112)



# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சிவபாதம் (இராசா)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், அரியாலை, நொத்தாரிஸ் லேனை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவபாதம் அவர்கள் நேற்று (10.09.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் கணபதிப்பிள்ளை - கோணேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் வயிரமுத்து - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சற்குணராஜா, குணாளன் (சசி), பிரபாகரன், சுகந்தா சுகுணதாசன், பிரதீபன், சுஜாத்தா, சுகிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜீவநந்தினி, வசந்தினி, சுகுணதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிணி, பிரவீண், துளசிகன், விஷ்ணுஜா, ஹர்சிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் இராசரத்தினம் (கிளி), மகாதேவன், குணதர்மபாலன், நவரட்ணராஜா, செல்வராஜா, கனேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசண்முகம் - நாகரத்தினம், சிவபாதவிருதயர், சிவசக்தி சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் பாலசிங்கத்தின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2003) வியாழக்கிழமை பி.ப.1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.02, நொத்தாரிஸ் லேன்,
"விஷ்ணுஜா பந்தல் சேவை",
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: சி.சற்குணராஜா (மகன்)

(22475)(16-17)

## திருமதி பிரான்சிஸ்கா கணேசபிள்ளை (இராசாத்தி)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ்கா கணேசபிள்ளை நேற்று (10.09.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கணேசபிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியர், புனிதபத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரது திருப்பலிப்பூசை இன்று (11.09.2003) வியாழக்கிழமை பி.ப.4.00 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

460, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (22478)(16-17)

தகவல்: க.றொ.தவேந்திரன் (மகன்)

## திருமதி நவரத்தினம் பொன்னுப்பிள்ளை

காங்கேசன்துறை, கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் பொன்னுப்பிள்ளை 08.09.2003 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை நவரத்தினம் (இளைப்பாறிய அதிபர், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலம்) அவர்களின் அன்பு மனைவியும் கீதாஞ்சலி, மகேந்திரராணி, பக்தவத்சலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரராஜன், வைத்திலிங்கம், பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனார்த்தன், மாலதி, பிரசாந ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (10.09.2003) புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பக்தவத்சலன் (மகன்)

T.P - 2361049 (சி-30111)

# ஈழத்து கூத்து விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ். திருமறைக்கலாமன்றம் நடத்தும் நான்கு நாள் ஈழத்து கூத்து விழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

முதல்நாள் பகல் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. மங்கள விளக்கேற்றலையடுத்து திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருட்திரு. நீ.மரிய சேவியர் அடிகள் ஆரம்ப உரையை நிகழ்த்துவார். இதன்பின்னர் கருத்துரைகள் இடம்பெறும்.

'மன்னார் பிரதேசக் கூத்து மரபுகள்' என்னும் தலைப்பில் ம.சாம்பிரதீபனும், 'மன்னார் பிரதேசக் கூத்து மரபு ஓர் அறிமுகம்' என்னும் தலைப்பில் எஸ்.ஏ.உதயனும், 'மன்னார் பிரதேசக் கூத்து மரபு - செயல்முறை விளக்கம்' கலா பூஷணம் செபமாலை குழந்தையும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். மதிய இடைவேளையின் பின்னர் ஆரம் பமாகும் நிகழ்வில் 'மலையகப் பிரதேசக் கூத்து மரபுகள்' என்னும் தலைப்பில் போ.யோனசன் ராஜ்குமாரும், 'காமன் கூத்தின் அரசியல் பொருளாதார மலையகத் தமிழர் பண்பாட்டியல் ஆய்வு' என்னும் தலைப்பில் பொன். பிரபாகரனும், 'மலையகத் தமிழர் பண்பாட்டில் அர்ச்சுனன் தவசு' என்னும் தலைப்பில் அன்னமுத்து ஜெகன்தாசனும் கருத்துரைகளை வழங்குவார்கள். இரவு நிகழ்ச்சிகள் மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும். இந்நிகழ்வின் ஆரம்ப உரையை வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.சொலமன் சிறிலும், சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்துவார்கள். அதனையடுத்து மலையக புதிய பண்பாட்டு அமைப்பு வழங்கும் 'அர்ச்சுனன் தபசு' மலையகக்கூத்தும், மன்னார் செபமாலை குழந்தை குழுவினர் வழங்கும் 'கல்சுமந்த காவலர்கள்' வடபாங்குக் கூத்தும் இடம்பெறும். (ஜ-8)


மோட்டரோலா தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு

காலை 9மணிமுதல்
தொடர்பு கொள்ள : 021 222 6722


## பயிற்சி

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி திருகோணமலையில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்கென யாழ்மாவட்டத்தில் இருந்து 15 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் உப்புவெளியில் உள்ள சுற்றுலாவிடுதியில் இப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

(ம-10-185)

## உளவளத் துணையாளருக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

உளவளத்துணையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு யாழ். உளவளத் துணை நிலையத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜிரி இசற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கு தொடர்ந்து 19 நாளகளுக்கு இடம்பெறவுள்ளது. (ம-12-ரி)


**வீடு தேவை**

யாழ். மாநகர சபை எல்லையுள் 7 அறைகளுக்கு (ROOMS) மேல் இருக்கக்கூடிய வீடு வர்த்தக நோக்கத்திற்காக குத்தகை அடிப்படையில் தேவை.

தொடர்புக்கு: S. மனோகரன்
T.P.: 0777 517019
(22480)

**நிறைஞ்சனாஸ்**

விஜய், பிரியங்கா சோப்ரா நடித்த

தமிழன்

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு

WISH MASTER
(கராட்டிப் படம்) இரவு 8.45 (பி.நே.)
(C/29905)

**நாகம்ஸ் சுன்னாகம்**

சில தினங்கள் மட்டும்
மம்முட்டி, அபிராமி, ராதாரவி, வடிவேல் நடித்த

சார்மேகம்

தினசரி காட்சிகள்: 11.00, 3.00 (பி.நே.)
இரவு 7.00 மணிக்கு

Red Scorpion
(C/29906)

**ராஜா யாழ்ப்பாணம்**

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

நாளை (தமிழ்)

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C/29904)



# நடமாடும் இலவச கண்சிகிச்சை முகாம்

"உங்கள் கண்களை நாங்கள் காப்போம்"

☆ உங்கள் கண்களை விசேட கண்பரிசோதகர்கள் மூலம் பரிசோதிப்பதற்கும்.
☆ சகல வகையான கண்ணாடிகளை சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும்.
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

| திகதி | பாடசாலை | நேரம் |
|---|---|---|
| 11-09-2003 | ★ யா/ பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் | காலை 9 மணி முதல் 1 மணி வரை. |
| | ★ வட்டு. இந்துக் கல்லூரி | மதியம் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை |
| 12-09-2003 | ★ யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம் | காலை 9 மணிமுதல் 1 மணிவரை |
| | ★ யா/ பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் | மதியம் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை |
| 15-09-2003 | ★ யா/ சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம் | காலை 9 மணிமுதல் 1 மணிவரை |
| | ★ யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | மதியம் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை |
| 16-09-2003 | ★ யா/ அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் | காலை 9 மணிமுதல் 1 மணிவரை |

அனுசரணை:

ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்

(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)

இல. 54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு-02.

(சி-30114) (16-18)



சுன்னாகம் பல நோ.கூ. ச. ஜசுபி பழத் தொழிற்சாலை அனுசரணையுடன் நடத்தப்படும்

# இலவச கண் பரிசோதனை முகாம்

காலம்: நாளை (12.09.2003) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை

இடம்: சுன்னாகம் பல நோ.கூ.சங்க மண்டபம்

☆ கொழும்பிலிருந்து வருகை தந்த வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படும் இந்தப் பரிசோதனை முகாமில் பெறுமதிவாய்ந்த கண்ணாடிகளை 750 ரூபாவிற்கு பெற்றுக்கொள்ளலாம்.

ப. நோ. கூ. சங்கம்
சுன்னாகம். (சி-30113)

- தலைவர்.


**DEPARTMENT OF HEALTH SERVICES,**
**TEACHING HOSPITAL, JAFFNA**
**REPAIRS TO HOSPITAL BUILDING AT FOREST LANE**

01. The Chairman, Divisional Tender Board, Teaching hospital, Jaffna will received sealed tenders for repairs to hospital, building at forest lane will be closed at 10.00 a.m. on 25-09-2003.
Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna up to 18-09.2003 on payment of a non-refundable fee of Rs.250/=
02. Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorised representatives are requested to be present at the opening of tenders.
03. Tender forms will be issued only to Contractors having valid registration in Grade M8 and above in the field of Building Construction under the Institute of Construction training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractor's Association of Srilanka (NCCASL).
04. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, T.H. Jaffna, or deposited in the Tender Box kept at the address appearing below, to received before the closing time.
05. Tender documents may be inspected free of charge at the Resident Engineer's office, C.E.C.B., T.H. Jaffna.
06. For further details please contact A.O., G.H. Jaffna.

Dr.S. Sathurmugam,
Chairman,
Divisional Tender Board,
T.H. Jaffna.

(C/30104) (26-16-18)


# SHARP

be sharp

## குடாநாட்டு வாடிக்கையாளர்களே! உங்களுக்கு ஒரு நற்செய்தி!

உங்களிடம் பாவிக்கும் நிலையிலோ அல்லது பாவிக்க முடியாத நிலையிலோ உள்ள கறுப்பு/வெள்ளை (BLACK & WHITE) தொலைக்காட்சியை அல்லது கலர் தொலைக்காட்சியை நாம் பெற்றுக்கொண்டு உடனடியாக புத்தம் புதிய ஜப்பானிய ஷார்ப் (SHARP) தொலைக்காட்சிகளை 5 வருட உத்தரவாதத்தில் உங்களுக்கு வழங்குகிறோம்!

இது ஓர் அரிய சந்தர்ப்பம்! நழுவ விட்டுவிடாதீர்கள்!!

குறிப்பு: ☆ நீங்கள் தரும் T.V. எந்தப் பெயரிலும் (BRAND) இருக்கலாம்.
☆ குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே இச்சலுகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: முகாமையாளர்,
பிறவுண் அன்ட் கம்பனி,
பிறவுண்ஸ் காட்சி அறை,
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 021 222 5150, 0777 :Ш0791

(சி-30111) (16-18)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் நேற்று 10.09.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தர்மராஜா (அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.ச.பொதுமுகாமையாளர்), காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் செல்வராசாத்தி, சிவலிங்கம் (வர்த்தகர்), காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சண்முகமலர் மற்றும் உருத்திரகுமாரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் யோகமணி ஆகியோரின் மைத்துனரும் பாலகுமார் (ஆசிரியர்,யாழ். மயிலிட்டி கலைமகள் ம.வி.), செல்வகுமார் (ஆசிரியர். யா/இணுவில் மத்திய கல்லூரி), யசோதா (3ஆம் வருட முகாமைத்துவம், யாழ் பல்கலைக்கழகம்), விஜயகுமார், ரமேஸ்குமார், நிரைஞ்சினி (2ஆம் வருட முகாமைத்துவம், கொழும்பு பல்கலைக்கழகம்), மயூரன், புரந்தரா, ரிஷிகேசன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையாரும் பவதாரணி (டென்மார்க்), கிருஷ்ணவேணி (டென்மார்க்), பாலமுரளி (ஜேர்மனி), மோகனதாஸ் (U.K.), பாலஅபிராமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.09.2003 காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 11.00 மணிக்கு பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு.
(22482)(16-18)

தகவல்:
வே.தர்மராஜா
(பொது முகாமையாளர்
அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.ச.)

# திருகோணமலை மாவட்டத்துக்கு இரு புதிய உள்ளூராட்சி மன்றங்கள்

## அமைச்சர் அலுவிகாரவினால் குழு நியமனம்

கொழும்பு, செப்.11

திருகோணமலை மாவட்டத்தில் இரு புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவது தொடர்பாக மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர், குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

இதன்படி, முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கிண்ணியா, நகர சபை ஆக்கப்படும்.

தமிழ்மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட ஈச்சிலம்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வெருகல் என்னும் பெயரில் புதிய பிரதேச சபையொன்று உருவாக்கப்படும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவிததன.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காமினி றொட்றிக்கோ தலைமையிலான இக்குழுவில் உள்ளூராட்சி மன்றங்களின் வடக்கு-கிழக்கு ஆணையாளரான திருமதி டி.டி. விஜயலஷ்மியும் அடங்குவார். அவர் குழுவின் செயலாளராகவும் பணியாற்றுவார். (ஐ)

# கிழக்கு கரையோர பிரதேசங்களை பாதுகாக்க விசேட செயற்றிட்டம்

## மாகாண செயலர் அறிவிப்பு

கிழக்கு மாகாணத்தின் கரையோரப பிரதேசங்களை அபிவிருத்தி செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட செயற்றிட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்தகவலை வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்ரங்கராஜா தெரிவித்துள்ளார்.

'கிழக்கு மாகாண கரையோர சமூக அபிவிருத்தித் திட்டம்' என்னும் பெயரில் அமுல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி அளிக்க முன்வந்திருப்பதாகவும் பிரதம செயலாளர் மேலும் கூறினார்.

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான இவ்வேலைத் திட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக அமுல்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு விளக்கமளித்துத் திட்டங்களை அடையாளம் காண்பது தொடர்பான ஒருநாள் செயலமர்வு நேற்று திருகோணமலையில் அமைந்துள்ள மாகாண சுகாதார அமைச்சு கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்பவற்றின் ஆணையாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆகியோரும் இச்செயலமர்வில் பங்குபற்றினர்.

### மலர் வெளியீடும் சஞ்சிகை வெளியீடும்

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் வெளியீடான 'கலாசுரபி' மலர் மற்றும் ஆரம்பக் கல்வி மன்றத்தின் 'ஆரம்ப அருவி' கையெழுத்துச் சஞ்சிகை, செல்வி இ.மீராவின் 'தமிழின் பம' கையெழுத்துச் சஞ்சிகை ஆகியவற்றின் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.(ம-10)

### ஜேர்மன் சமஷ்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியிலிருந்து எதுவித தடையும் இருக்கமாட்டாது.

மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு போதியநிதி வழங்கப்படுகின்றது. இது குறித்து இலங்கை அரசாங்கமும் யோசனை செய்து வருகின்றது.

அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு பிராந்தியங்களுக்குப் பகிரப்படுகின்றன. எனவே, இதன்மூலம் பிராந்தியங்களுக்கு மேலாண்மை வழங்கப்படுகின்றது.

சமாதானம் இல்லாமல் எந்த நாடும் அபிவிருத்தி காணமுடியாது. இதனை மக்கள் உணர்ந்துள்ளனர். தேர்தல்கள் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு எதிர்கட்சியிலுள்ள தினேஸ் குணவர்த்தனவை அரசு நியமித்திருக்கிறது. இதுவே ஒருங்கிணைப்புக்கு நாம் வழங்கக் கூடிய பாரிய பங்களிப்பாகும்.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இது குறித்து கலந்துரையாடலும் நடைபெற்றது.

'கொன்றாட் அடினோர் ஸ்டிபுங்' நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் கண்டர் ரின்சே, ஜேர்மன் சமஷ்டி முறைபற்றி விரிவான விளக்கம் அளித்தார்.

காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின, நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜயந்த, தமிழ்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் முதலானோரும் கலந்துகொண்டனர். (ஐ)

### கொழும்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நாளைய மாநாட்டைப் பகிஷ்கரிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனச்சாட்சியின் குரலின் ஆணையின்படியே விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுக்க வரநேர்ந்தது. அக்காலப்பகுதியில் நிலவிய சூழ்நிலையில் தற்போது எந்த விதத்திலும், எந்த வகையிலும் மாற்றம் ஏற்படாமலே இருக்கிறது. இதுவே விடுதலைப் புலிகளை டோக்கியோ மாநாட்டின் தொடரான கொழும்பு கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதவர்களாக்கியுள்ளது.

மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிதியினைப் பெற்று அதனை வழங்கக்கூடிய உறுதியான அமைப்பு இல்லாமையே நாம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றைக் கோருவதற்கு முக்கிய காரணமாகின்றது. அத்தகைய செயற்திறன் மிக்கதோர் இடைக்கால நிர்வாக அமைப்பினால்தான் நிதியினைப் பெற்று பகிர்ந்தளிக்கமுடியும் என விடுதலைப் புலிகள் நம்புகின்றனர். இது தொடர்பான எமது தலைமைப்பீடத்தின் தெளிவான நிலைப்பாடு எதிர்வரும் 14ஆம் திகதி கிளிநொச்சியில ஜப்பானின் விசேட தூதர் அகாஷியுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் விளக்கப்படும்.

- இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12-164)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்.
★ யாழ். முன்னணி ஆசிரியர் குழுவினால்
O/L மாணவர்களுக்கான அதிதுரித மீட்டல்
வினா விடையும் மாதிரி வினாத்தாள்
மீட்டலும் கலந்துரையாடலும்
ஆரம்பம்: 15-09-2003
Mon.4.00 p.m.
ஏற்றுக்கொள்ளவும்.(12-16-98)

கணனி எழுத்து
றபர் ஸ்ராம்ப்
செய்து தர நாட
வேண்டிய இடம்.
ONE HOUR
RUBBER STAMPS
Pillaiyar press, Nallur
பிள்ளையார் அச்சகம்,
நல்லூர். T.P. 222 6722

# தொழில்நுட்ப கல்லூரிக்கு மேலும் ஒரு தொகுதி பொருள்கள் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான மேலும் ஒரு தொகுதிப் பொருள்களை மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமது தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவும் குறைபாடுகள் குறித்து மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியதன் பயனாகவே இந்தப் பொருள்கள் வழங்கப்படவிருப்பதாகவும் -

கடந்த மாதமும் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கல்லூரிக்குக் கிடைத்ததாகவும் அவர் மேலும் கூறினார். (ம-12)

# கதலி வாழைப்பழ விலை திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் கதலி வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ கதலி வாழைப்பழத்தின் விலை தற்போது 60 முதல் 70 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால், கடந்த இருமாதங்களுக்கு முன்னர் கதலி வாழைப்பழம் 30முதல் 35ரூபா விலையில் விற்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் பெய்த மழை மற்றும் கடும் காற்றின் காரணமாக வாழை மரங்கள் அதிகளவில் அழிந்து போனமையும் தெற்குக்கு வாழைப்பழம் அனுப்பப்பட்டு வருவதாலும் ஆலய வருடாந்த உற்சவங்கள் நடைபெற்று வருவதனாலேயே இவ்வாறு வாழைப்பழம் விலை உயரக் காரணம் என வாழைப்பழ வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6-17)

### டென்மார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக கிளிநொச் சிக்கு வருகைதந்த டென்மார்க் தூதரை முகமாலை சோதனைச்சாவடியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், தமிழீழக் காவல்துறையின் வாகன அணி வரவேற்புடன் கிளிநொச்சிக்கு அழைத்து வந்தனர்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் வேலைத்திட்டங்களையும் அவர் பார்வையிட்டார்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கும் தூதர் இன்று முல்லைத்தீவு சென்று போரினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிடவுள்ளார் அத்துடன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேலைத்திட்டங்களையும் பார்வையிடவுள்ளார். பின்னர் யாழ்ப்பாணம் வந்து இங்கிருந்து கொழும்பு செல்லவுள்ளார். (ஐ-12-164)

### பாசிக்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாப் பிரயாணிகளுக்கும் இடைஞ்சலாக உள்ளதெனவும் தெரிவிக்கப் படுகிறது.

பாசிக்குடாவிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள கல்குடாவில் ஏற்கனவே பொலீஸ் காவல் நிலையமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், பாசிக்குடாவிலும் பொலீஸ் முகாம் அமைக்கப்படுவது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ)

### அரசுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து சுவிற்ஸர்லாந்து அக்கறை கொண்டிருக்கிறது. இனப்பிரச்சனை காரணமாக பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் சுவிற்ஸர்லாந்தில் வாழ்கிறார்கள். இந்த நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிக்கு சுவிற்ஸர்லாந்து ஆதரவு தெரிவிக்கிறது.

- இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)



மட்டக்களப்பு கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதிக்கு புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், திருமதி ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் நேற்றுக் காலை கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுவதற்காக வருகைதந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவிவரும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குக!

## துரைரெட்ணசிங்கம் எம்.பி. கல்வி அமைச்சருக்கு கடிதம்

கொழும்பு,செப்.11

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பெருமளவில் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால், அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு கோரி திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம் கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தற்காலிக அடிப்படையில் பல பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்ற பலர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் குறைந்த வேதனத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இத்தகையோருக்கு நியமனம் வழங்கி ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையினை நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் எம்.பி. அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

# எதிர்வரும் சனிக்கிழமை தேசிய துக்கதினம்

கொழும்பு,செப்.11

அமரத்துவமடைந்த மடிகே பஞ்ஞாசீஹ மகாநாயக்க தேரரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும். அன்று தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

அரச கட்டடங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் தொங்கவிடப்பட வேண்டும் என்றும், மது விற பனை நிலையங்கள், இறைச்சிக் கடைகள் மூடப்பட வேண்டும் என்றும், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## டாக்டர் பொன்னம்பலம் சிவஞானம்

(மெதடிஸ் மிசன் வைத்தியசாலை - புத்தூர், கூட்டுறவு மருந்தகம், அச்சுவேலி)

அச்சுவேலி, இடைக்காட்டைச் சேர்ந்த டாக்டர் பொன்னம்பலம் சிவஞானம் நேற்று (10.09.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இடைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகனும் ராசமணியின் அருமைக் கணவரும் சிவராசா(ஆசிரியர், பதுளை சரஸ்வதி ம.வி.), சிவநேசன்(பொறியியலாளர், லண்டன்), சிவநாதன்(கனடா) ஆகியோரது பாசமிகு தந்தையும் சி.பவானி (ஆசிரியை, பதுளை சரஸ்வதி ம.வி.), ருசாந்தி(லண்டன்) ஆகியோரது மாமனாரும் சுபாதி (லண்டன்), கபிலன் (லண்டன்) ஆகியோரது அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 13.09.2003 சனிக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இடைக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்காடு, அச்சுவேலி. (C/30115) (22-16-18)

தகவல்: சி.சிவராசா (மகன்)

## சதாசிவம் சிவக்கொழுந்து

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவக்கொழுந்து நேற்று (10.09.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் உருக்குமணியின் அன்புக் கணவரும் தவலிங்கம், சோதிலிங்கம், அமுதலிங்கம், கணேசலிங்கம், சத்தியலிங்கம்(நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), உருத்திரலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவநாயகி, பகவதி(ஆசிரியை, புத்தூர் மெதடிஸ் பாடசாலை), சிவகுமாரி, சுஜாதா(சுவிஸ்), ஜெயபரி (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி), ஞானசோதி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவதர்சன், சிவதரன், கஜேந்திரன், கடாட்சரன், லிங்கரூபன், பகீரன், குகேந்தினி, சிவசங்கர், தனுசன், திவ்வியா, கீர்த்தனா, கேயோன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2003) வியாழக்கிழமை நண்பகல் 1 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்: மகன் (22483) (22-16-18)

இது உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2003இல் வெளியிடப்பட்டது.



# வல்லரசையே அதிரவைத்த பின்லேடன் எங்கே?

**பு**ழுதி மண்டலத்துக்குள் அமெரிக்கா மறைந்து போய் இன்றுடன் இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன.

2001இல் இதே திகதியில் வானுயர்ந்த கட்டடங்கள் இரண்டு, பார்த்துக் கொண்டிருக்கையிலேயே தரை நோக்கி சீற, வானளாவி எழுந்தது புழுதி மண்டலம் இடையே அகப்பட்ட வீதி இடைவெளிகள் வழியாக அது விரைந்ததைத் தொலைக்காட்சித் திரைகளில் வழியாகப் பார்த்து உலகமே விறைத்துப் போயிருந்த தருணம் அது.

ஆனால், ஒருவர் மட்டும் அதனைப் பார்த்துச் சிரித்திருப்பார். ஒரு சில நிமிடங்களில் ஆட்டங்கண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் கௌரவத்தையும் நினைத்துக் கொடுப்புக்குள் புன்னகைத்திருப்பார்.

அவர்தான் 'இந்த உலகளாவிய சோகத்துக்கு' (அது எத்தனை பேருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது என்பது வேறு விடயம்) காரணமானவர் - 'மாஸ்டர் மைண்ட்' - சவூதி அரேபிய கோடீஸ்வரர் பின்லேடன் என்று அமெரிக்கா பின்னர் அறிவித்தது.

அமெரிக்காவின் கூற்றில் அவர் பயங்கரவாதி, உலகில் தேடப்படுபவர்களில் முதன்மையானவர், ஈவிரக்கமற்றவர் இன்னும் என்னவெல்லாம் உள்ளனவோ அவையெல்லாம். ஆனால், உலகின் கணிசமான பகுதியினருக்கு அவர் ஹீரோ. (அண்மையில் கிழக்கிலும்கூட இவரது பெயரில் ஆயுதக் குழுக்கள் இயங்குவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.)

செப்ரெம்பர் 11 தாக்குதலின் சூத்திரதாரி பின்லேடன்தான் என்று அமெரிக்கா அறிவித்ததும் அவரைத் தேடுவதில் அமெரிக்கக் கழுகுகள் தீவிரமாகின. அவற்றுக்கு ஆப்கானிஸ்தான் முதல் பலி.

இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. டோறாபோறா (ஆப்கானிஸ்தான்) மலைகளைக் குடைந்தாயிற்று. அவற்றைப் பிளாஸ்ரர் குண்டுகளால் நொறுக்கியாயிற்று. ஆனால், முடிவு மட்டும் கிடைக்கவில்லை.

இந்த இரண்டு வருடத் தேடுதலில் அமெரிக்காவுக்கு கிடைத்ததெல்லாம் தோல்விதான். தனியொரு மனிதனாக அமெரிக்காவுக்கு இன்னும் தண்ணி காட்டிக்கொண்டிருக்கிறார் அந்த 42 வயதான மனிதர்.

தன்னுடைய முழு தொழில்நுட்பபலத்தையும் படைப்பலத்தையும் பயன்படுத்தியும் அமெரிக்காவால் இரண்டு வருடங்களின் பின்னரும் பின்லேடனின் நிலை பற்றி எதனையும் உறுதியாகக் கூறமுடியவில்லை.

டோறாபோறா மலைக் குகைகளில் அந்த 6 அடி மனிதரின் சமாதி இருக்கிறதா? இல்லை, ஆப்கான் - பாகிஸ்தான் எல்லையோரக் கிராமங்களில் அவர் இன்னும் உயிருடன் உலாவிக் கொண்டிருக்கிறாரா?

தெரியவில்லை அமெரிக்காவுக்கு அவரைப் பற்றி எதுவுமே தெரியவில்லை. வளர்த்தகடா மார்பில் பாய்ந்த கதையாகத் தன்னையே ஆட்டி வைத்து உலகை அதிரவைத்த மனிதரை இரண்டு வருடமாக சல்லடைபோட்டு இன்னும் தேடிக்கொண்டிருக்கிறது அது.

அவரைக் காட்டித் தருபவர்களுக்கு 2 கோடி 50 லட்சம் டொலர் பரிசு தருவதாக அறிவித்தும் ஒன்றும் தெரிந்தபாடாயில்லை.

ஈராக்கிய அதிபர் சதாமைக்கூட தாங்கள் நெருங்கிவிட்டதாகவும் தமது முற்றுகையில் இருந்து மூன்று முறை அவர் தப்பிவிட்டதாகவும் கூறும் அமெரிக்கர்களால் பின்லேடனின் சிறு அசைவைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு கட்டத்தில் சதாமை அமெரிக்கா பிடித்துவிட்டாலும்கூட பின்லேடனை அதனால் தொடக்கூட முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். அமெரிக்காவின் நிலை அந்தளவுக்குப் பரிதாபம் பின்லேடன் விடயத்தில்.

ஆப்கானின் டோறாபோறா மலைத் தொடர்கள்தான் தலிபான்களும், அல்கெய்டா உறுப்பினர்களும் அமெரிக்கர்களைக் கடைசியாக எதிர்த்துப் போராடிய நிலைகள். அமெரிக்கா அங்கு குண்டுமாரி பொழிந்தது. மலைத் தொடரில் உள்ள குகைகளிலிருந்து ஒட்சிசனை உறுஞ்சி இழுத்துவிடக்கூடிய நவீன ரக குண்டுகளை எல்லாம் வீசியது.

இந்தத் தாக்குதலில் பின்லேடன் சிலவேளை கொல்லப்பட்டிருக்கலாம் என்றொரு சந்தேகம் இருக்கிறது. ஆனால், அது சந்தேகம் மட்டும்தான். ஏனெனில், அதில் அமெரிக்கர்களுக்கே கூட அதிக நம்பிக்கை இல்லை.

பின்லேடன் இன்னும் உயிருடன் உலாவிக்கொண்டிருக்கிறார் என்பதுதான் பலரதும் - பரவலான - கருத்து.

இந்த விடயத்தில் அமெரிக்காவின நிலை பற்றி விளக்குகிறார் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பயங்கரவாதம தொடர்பான ஆலோசகர் றைட் - நெவில (Wright-Neville). தற்போது அவர் மெல்போணில் மொனாஷ் உலக பயங்கரவாத ஆய்வுப் பிரிவில் பணியாற்றுகின்றார்.


அவர் சொல்கிறார், "சதாம் ஹுசைன ஒடியொளிவதற்குப் பெரிய இடம் இல்லை ஈராக்கைவிட்டு அவரால் வெளியேறமுடியாது. ஆனால், பின்லேடனால பல இடங்களுக்கும் செல்லமுடியும். நான் நினைக்கிறேன் அவர்களால் (அமெரிக்கர்கள்) சதாமை உயிருடனோ பிணமாகவோ பிடிக்க முடியும். ஆனால், பின்லேடனை அவர்களால் பிடிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. அவர்களால் அவரைக் கொல்லமுடியும் என்றுகூட நம்ப முடியவில்லை" - என்றார்.

பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என்பதை அமெரிக்க பாதுகாப்பு நிபுணர்களும் உறுதியாக நம்புகின்றார்கள். ஆனால், அவரால் எப்படி அமெரிக்காவின் விசேட படைகளிடம் இருந்தும், உளவு செய்மதிகளிடம் இருந்தும், விமானங்களின் கண்காணிப்பில் இருந்தும் தப்பிக்கொள்ள முடிகிறது என்பதுதான் அவர்களுக்குப் புரியாத - விடுவிக்கப்பட முடியாத - புதிராக இருக்கிறது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளில் உள்ள அவருக்குப் பாதுகாப்பான வீடுகளில் பின்லேடன் மாறிமாறி மறைந்து வாழ்வதாக அனேகமானவர்கள் நம்புகிறார்கள்.

இது ஒரு பெரிய பரப்பு. அடிப்படைவாத இஸ்லாமியர்களால் சூழப்பட்ட பகுதி. அவர்கள் பின்லேடன் மீது அனுதாபங் கொண்டுள்ளார்கள். இதனால் அமெரிக்க உளவு நிறுவனங்களால் அவர்களிடையே ஊடுருவி உண்மை நிலைவரத்தைக் கண்டறிய முடியவில்லை என்று அமெரிக்க போர் ஆற்றல் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

- பிரேம் -



"செப்ரெம்பர் 11 தாக்குதலின் முன்பே பின்லேடன் பாகிஸ்தானில் தனது வலையமைப்பைப் பரவலாக ஏற்படுத்திக் கொண்டுவிட்டார். தகவல்களுக்கானதும் தொடர்புகளுக்கானதுமான மையமாக அதனை அவர் உருவாக்கிக்கொண்டார்" - என்று தெரிவித்தார் ஆப்கான் நிபுணர் அஹமட் ரஷீட்.

அந்த வலைப்பின்னல் தனியே இஸ்லாமிய அடிப்படைவாதிகளைக் கொண்ட பகுதிகளில் மட்டுமல்ல, பாகிஸ்தானிய நகரங்கள் வரையும் விரிவாகப் பரந்துள்ளது. பாகிஸ்தான் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட பல அல்கெய்டா உறுப்பினர்கள் நகரங்களில்தான் கைதுசெய்யப்பட்டார்கள்.

இந்த விடயத்தில் பாகிஸ்தான் அரசு மீதும் சந்தேகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. பின்லேடனைக் கைது செய்வதில் அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் வழங்கிவரும் ஒத்துழைப்பு எத்தகையது என்பதும் கேள்விக்குறியானது என்றும் சொல்லப்படுகின்றது.

2001ஆம் ஆண்டுக்கு - அமெரிக்க தாக்குதலுக்கு - பின்னர் பின்லேடனின் உரை அடங்கிய ஒளிநாடா ஒன்றும் வெளிவரவில்லை. அவர் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்வதில் அமெரிக்கா படும் சிரமங்களுக்கு இதுவும் ஒரு காரணம் எனப்படுகின்றது.

இந்த விடயத்தில் பின்லேடன் மிக மிக அவதானமாகச் செயற்படுகின்றார். தனது மறைவிடம், தோற்றம் என்பன வெளிவர உதவக் கூடிய எதனையும் அவர் செய்யவில்லை. வெளியேயுள்ள தனது நெருங்கிய சகாக்களுடனான தொடர்புகளைக்கூட அவர் நேரடியாக வைத்துக்கொள்ளவில்லை. தனது கருத்துக்களையும்கூட வேறுயார் மூலமாவதுதான் வெளியே கொண்டு வருகின்றார்.

பின்லேடனைப் பிடிப்பதில், இவ்வாறு அமெரிக்கர்கள் என்னதான் காரணம் கூறினாலும் பின்லேடன் விடயத்தில் அவர்கள் முற்றாகத் தோற்றுவிட்டார்கள் என்பதுதான் நிதர்சனம்.

உலக வர்த்தக மையக் கட்டடம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அதிபர் புஷ், "இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்களை அமெரிக்கா நிச்சயமாக நீதியின் முன் நிறுத்தும்" என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், அவரது கூற்று சாத்தியமாகக் கூடிய ஏதுநிலை சிறிதுகூட இந்த இரண்டு வருடங்களில் தென்படவேயில்லை.

"உலகப் பொலீஸ்காரர்களால்" அவர்களே கூறிக்கொள்ளும் உலகின் முதல்தர கிரிமினலை ஒன்றும் செய்யமுடியவில்லை என்பதுதான் இந்த விடயத்தில் உண்மை. ★

# மானுடத்தின் குரலான பாரதி

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நினைவு தினம் இன்றாகும். தமிழுக்கு உணர்ச்சிக் கவிதைகளையும் தமிழ்க் கவிதைக்குப் புதிய பரிணாமத்தையும் கொடுத்தவர் பாரதி. அவரது கவிதைகள் ஒரு யுகத்தின் புரட்சி, காலத்தின் தேவை. அந்த மகாகவியின் நினைவாக இந்தக் கட்டுரை வெளிடப்படுகின்றது.



பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும் என்றும் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென்றும் விரும்பியவர் பாரதியார். இவர் தனது இனிய தமிழ்க் கவிதைகள் மூலம் மொழிப்பற்றை, நாட்டுப்பற்றை, உரிமை வேட்கையை உண்டாக்க விழைந்தார்.

கல்லாமையும் இல்லாமையும் இவ்வுலக வாழ்விற்கு இடையூறாக அமைபவையாகும். இவற்றை இல்லாதொழிக்க வேண்டுமென்பதை பாரதியார் எடுத்துரைத்தார். சாதிப் பாகுபாடு போன்ற பல சமூக ஏற்றத்தாழ்வுகள், பெண் அடிமை போன்றவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்தார். இவ்வாறாகப் பல வழிகளில் நாட்டிற்காகவும், மக்கள் மேம்பாட்டிற்காகவும் முன்னின்று உழைத்த ஒரு மகாகவியின் நினைவு தினம் இன்று. அவரைப்பற்றிச் சிந்திப்பது எம்மெல்லோருக்கும் பயனுள்ளதாகும்.

நெல்லை மாவட்டத்து எட்டயபுரத்தில் 11.12.1882 இல் பிறந்தார். இவரது பெயர் சுப்பிரமணியன். செல்லப்பெயர் சுப்பையா. தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் லட்சுமி அம்மாள். ஏழாவது வயதிலே கவிமழை பொழியத் தொடங்கிப் பதினோராவது வயதில் "பாரதி" என்ற பட்டத்தைப் பெற்றார். பாரதியாரைப் பற்றி நினைத்ததும் எம் மனதிலே தோன்றுவது அவரது பஞ்சகச்சம், வால்விட்ட தலைப்பாகை, மெட்டாரியான் மீசை என்பவையே.

ஆரம்பத்தில் பள்ளித் தமிழாசிரியராக இருந்து பின்னர் பத்திரிகை ஆசிரியராகப் பதவியேற்றார். "பாஞ்சாலிசபதம்", "குயில் பாட்டு" போன்ற நூல்களை எழுதி இலக்கிய வானில் ஒளி வீசும் முழுநிலவாகப் பிரகாசித்தார்.

பாரதியார் பாடல்கள் எளிதாக விளங்கக் கூடியவையாகவும், ஊக்கம், உற்சாகம் ஊட்டக் கூடியவையாகவும், உந்து சக்தியைத் தருபவையாகவும் உள்ளதைக் காணலாம். பட்டினியால் யாரும் இறக்கக்கூடாது, யாரும் யாரையும் அடிமைப்படுத்தக்கூடாது, ஒருவர் பொருளை ஒருவர் திருடிப் பிழைக்கக்கூடாது என்றும் எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று மகிழ்வாய் வாழ வேண்டும் என்றும் பாரதியார் கூறியுள்ளார்.

பாரதியாரின் பரந்த சிந்தனையும் உயர்ந்த உள்ளமும் சிவசக்தியிடம் இப்படி ஒரு வேண்டுகோளை விடுக்கின்றது.

"நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய், வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே."

பல மொழிகளைத் தெரிந்த இவர், தமக்குத் தெரிந்த மொழிகளில் சிறந்த மொழி தமிழ் மொழியே என்று இப்பாடல் மூலம் கூறுகின்றார்.

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம்"*

அதேபோல் புலவர்களிலே சிறந்த புலவர்களாகக் கம்பரை, வள்ளுவரை, இளங்கோவைக் குறிப்பிடுகிறார்.

பொதுவாக எல்லோரும் பிறந்த நாட்டைத் தாய் நாடென்றே அழைப்பர். ஆனால், பாரதியார் தனது பாடலிலே தந்தையார் நாடென்று குறிப்பிடுகின்றார். தந்தையார் நாடென்பதன் மூலம் அதை வீரமிக்க நாடென்று குறிப்பிட அவர் முற்பட்டிருக்கலாம்.

*"தந்தையார் நாடென்ற பேச்சினிலே ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே"* என்றார் பாரதி

பெண்களுக்குப் படிப்பெதற்கு? வெளி வேலை எதற்கு ? கணவனுக்குத் தொண்டு செய்வதும், பிள்ளைகளைப் பராமரித்து வீட்டைக் கவனித்தலுமே பெண்களின் பங்கென்றிருந்த அன்றைய நடைமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். பெண்கள் படிக்கவேண்டும் பட்டம் பெறவேண்டுமென்பதை இப்பாடல் வரிகள் விளக்கும்.

*"பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"*

நிறத்தால், இனத்தால் வேற்றுமை காட்டும் வேடிக்கை மனிதர்களைப் பார்த்து இவ்வாறு குறிப்பிடுகிறார் பாரதி. (11 ஆம் பக்கம் பார்க்க)

## மானுடத்தின்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் - அதில்*
*மானுடர் வேற்றுமையில்லை*
*எண்ணங்கள் செய்கைகளெல்லாம் - இங்கு*
*யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"* மதத்தால் மக்கள் பிரிவடைந்து ஒருவரோடொருவர் போரிடும் நிலை கண்ட பாரதி "தெய்வம் ஒன்று" என்றும் இதற்காகச் சண்டை எதற்கு என்றும் அறிவுரை கூறுகின்றார்.

*"தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்*
*தீயை வளர்ப்பவர் மூடர்*
*உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்*
*ஓர் பொருளானது தெய்வம்"*

நிறைவாகப் பாரதியார் கூறும் மேலோர் யார் என்பதை அவரது இப்பாடல் மூலம் அறியலாம்.

*"நீதி உயர்ந்த மதி, கல்வி - அன்பு*
*நிறைய உடையவர்கள் மேலோர்.*

இவ்வாறாகப் பல சீர்திருத்தக் கருத்துக்களை துணிவோடு தனது இனிய பாடல்கள் மூலம் சமுதாயத்திற்கு எடுத்துரைத்த பாரதியார் 11.09.1921 இல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

*குளப்பிட்டி. க.அருமைநாயகம*

# சாயி சிந்தனை

## தியாக உணர்வு



தியாக உணர்வை உலகத்து மனித குலம் அனைத்தும் ஏற்கவேண்டும் என்ற பாடத்தை இயற்கை தானே முன்னுதாரணமாக இருந்து போதிக்கின்றது. அனைவருக்கும் அமைதியின் செய்தியை மரங்கள் வெளிப்படுத்துகின்றன. தனது கிளைகளை வெட்டுபவர்க்கும் கூட மரங்கள் இனிய குளிர் நிழலைத் தந்து மகிழ்விக்கின்றன. மலைகள் குளிர், மழை, வெப்பம் இவற்றைப் பொருட்படுத்தாது நிலையாக நின்று பொறுமையின் செய்தியைப் போதிக்கின்றன. எதிர்காலத்தைப் பற்றிய கவலை வேண்டாம் எனப் பறவைகள் பாடம் கற்றுத் தருகின்றன. மரணம், மனிதத்திற்கு தேகத்தின் நிலையாமையைப் பற்றி எடுத்துக்கூறி உலகமே மாயை என்பதை உணர்த்துகிறது. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வமாம் (இவ்வுலகம் அநித்யம், முழுமையும் துயரம், ஆகவே இறைவனைப் பற்றியே சிந்தியுங்கள்!). இத்தகைய நிலையில் ஏன் மனிதனால் தியாக உணர்வைப் பற்றிய சிந்தனைகளை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை? உடல் நிரந்தரமற்றது எனத் தெரிந்தும், அவன் ஆசைகளால் கட்டுபட்டிருக்கிறான். அவனது துயரங்களை விலக்க வேண்டுமானால், இயற்கை கற்றுத்தரும முன்னுதாரணங்களை அவன் பின்பற்றவேண்டும். இயற்கையே சிறந்த ஆசிரியன். அது மனிதனை இரக்கம், அன்பு, தியாக உணர்வு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுமாறு தூண்டுகின்றது.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## புதைத்த மட்டைகளை எடுக்க அனுமதி

தும்பு உற்பத்திக்காக 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் கச்சாய் கடலேரியில் புதைக்கப்பட்ட தென்னம் மட்டைகளை வெளியே எடுப்பதற்கு அவற்றின் உரிமையாளர்களுக்கு படை அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

தென்னம் மட்டைகள் புதைக்கப்பட்ட பகுதியில் மிதிவெடி பரிசோதனை மேற்கொண்ட பின்னர் இவைகளை மீட்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் சாவகச்சேரி கச்சாய் வீதி லிகோரியார் தேவாலயத்திற்கு அருகில் உள்ள கடலேரியில் தென்னம் மட்டைகள் புதைக்கப்பட்டதாகவும்-

இடம்பெயர்வுக்குப் பின்னர் அவ்வீதியூடாக கடலேரிக்குச் செல்வது தடைவிதிக்கப்பட்டதால் தென்னம் மட்டைகளை வெளியே எடுக்க முடியவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது.

நீண்டநாள் கோரிக்கையின் பின்னா கடந்த திங்கள் இவ்விடத்தைப் பார்வையிட்ட படை அதிகாரிகள் மட்டைகளை வெளியே எடுக்க அனுமதி வழங்கிய போதிலும் மீண்டும் மட்டைகள் புதைக்க அனுமதிக்கப்படமாட்டாது எனக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)


### தேவை

- பில்கிளார்க்
- சப்பிளையர்

(பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

தொடர்பு:
**ஹோட்டல் றொலெக்ஸ்**
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(குகன் விருந்தகம்).

### விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ். மாவட்டத்தில் வில்லியம் பிஸ்கிற் விநியோகத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

- நாளொன்றுக்கு 250/- ரூபா சம்பளமும் மதிய உணவும் வழங்கப்படும்.
- நேர்முகப் பரீட்சைக்கு:

**113A, வேம்படி றோட், யாழ்ப்பாணம்.**
(12.09.2003) வெள்ளிக்கிழமை காலை 8மணி முதல் 11 மணிவரை.


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**கந்தவனம் தர்ஷிகா**

(கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவி)

*சிந்தாமணி விநாயகர் அருளிபது*
25.03.1990
*சிந்தாமணி விநாயகர் பாதம் அடைந்தது*
23.08.2002



"கந்த வனம் மனையில்
களித்தாறி மீண்டெடன்கால்
வந்திடுவாய்!" என்றேதான்
வரந்தந் தனுப்பினரோ
சிந்தா மணிக் கஜனார்?
செல்வி தர்ஷிகா, மகளே!
சிந்தாமணி யான்பாதம்
தித்திக்க வாழி அம்மா!

அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

*"கவி போட்டோ",*
*நவாலி தெற்கு.*

(C/30096) (26-15-19)


**எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்**



விலை ரூ.:195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)



பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த.பெ 1909, 75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 074-700600. பக்ஸ்: 074-700877, 2687175 Web Site: http://www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்: • 17/48, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ.பே: 08-2261746 பக்ஸ்: 082-238134 • 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ.பே: 027-2250037 பக்ஸ் 027-2250222 • 3/62, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ.பே: 041-28486 பக்ஸ் 041-27488 • நீல் மாவத்தை, அம்பாறை. தொ.பே: 063-2222897 பக்ஸ். 063-2222862 • 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ.பே: 025-2225048/9 பக்ஸ்: 025-2225050 • நுளசிரிபட்டிபட், இல.195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ.பே/பக்ஸ்: 045-2222389 • இல.105, குருணாகல் வீதி, புத்தளம். தொ.பே: 032-2267410 பே/பக்ஸ்: 032-2267410 • இல.83, ... தொலைபேசி: 074-372010 தொலைபேசி/பெக்ஸ்: 035-2225222

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ்குறிப்பிட்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்....................................................

விலாசம்....................................................

சேவை நிலையம்.............................. தொலைபேசி..............................

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

# உலகை அதிர வைத்த தாக்குதலின் இரண்டாவது நினைவு தினம் இன்று

**'உலகத்தின் பொலீஸ்காரன்' எனக் கூறப்படும் அமெரிக்கா மீது 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டனர். அமெரிக்காவையே வியக்க வைத்த இந்தத் தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 2 ஆண்டுகள் பூர்த்தி அடைகின்றன. அந்தச் சம்பவத்தை ஞாபகப்படுத்தும் விதத்தில் இக் கட்டுரை வெளியாகிறது.**

இன்று உலகில் மனிதர்கள் சுதந்திரத்துக்காகப் போராடுகின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது போராட்டங்களில் வெற்றியும் அடைகின்றனர். கடைசியில் அவற்றை நினைவு கூர்வதன் மூலம் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால், இந்த உண்மைக்கு மாறுபாடானதொரு நிலை உருவாகுமானால் எவ்வாறிருக்கும்? அனுபவித்த சுதந்திரத்தை இழந்து போகும் நிலைமை ஒருநாட்டுக்கு ஏற்படுமானால், உண்மையில் அது கவலைக்குரியதொரு விடயமே.

'உலகத்தின் பொலீஸ்காரன்' என்ற கௌரவப் பட்டத்துக்குரிய நாடொன்றுக்கு அவ்வித நிலைமை ஏற்படுமானால் அது மேலும் கவலையளிக்கும் விடயமே. உலக அரங்கில் அமெரிக்காவுக்கு இன்று அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. தமது சுதந்திரம் பயங்கரவாதிகளால் பறிக்கப்பட்ட நாளை நினைவு கூர்ந்து, கவலை கொள்வதற்காக அந்த நாள் இன்று செப்ரெம்பர் 11ஆம் திகதியாக - அமெரிக்க மக்கள் முன் உதயமாகியுள்ளது. அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நியூயோர்க் நகரத்தில் அமைந்திருந்த உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதும் வாஷிங்ரன் நகரத்திலிருந்த அமெரிக்க பாதுகாப்புத்துறைத் தலைமையகமான பென்ரகன் கட்டடம் மீதும பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் சரியாக இரண்டு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன.

உலகின் ஸ்திரமான சூழ்நிலையில், இவ் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப நிகழ்வாக இத்தாக்குதல் சம்பவம் கருதப்பட்டது.

1966ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட இவ் உலக வர்த்தக மையக் கட்டட நிர்மாணப்பணி 1973ஆம் ஆண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடம் உருவாக்கப்பட்ட வேளையில்



மணிக்கு 200 மைல் வேகத்தில் வீசும் காற்று மற்றும் பெரிய விமானங்கள் அருகில் பறப்பதால் ஏற்படும் அதிர்வு ஆகியவற்றால் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில் நன்கு திட்டமிடப் பட்டே நிர்மாணிக்கப்பட்டது.

இருந்த போதிலும் இவ்விதம் இளைய பரம்பரையினரால் திட்டமிடப் பட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைச் சமாளிக்க அதனால் இயலாது போய்விட்டது. 1973ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விவரப்படி இக் கட்டடத்துக்கான நிர்மாணச் செலவாக 15 கோடி அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது எனத்தெரிய வந்துள்ளது.

அண்மைய வரலாற்றில் மிகக் குறுகிய கால அவகாசத்தில் பெருமதொகையான மனித உயிர்களைக் காவு கொண்டதோடு, கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி நடத்தப்பட்ட தாக்குதல் என்ற வகையில் இச்சம்பவம் பெரும் முக்கியத்துவம் கொண்டதாக அமைந்தது.

இற்றைக்குச் சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்க மணிக்கூடுகள் காலை 7.58 என நேரம் காட்டிய வேளையில், அதாவது ஸ்ரீலங்காவின் நேரம் இரவு 10.00 மணியைக் காட்டி நின்ற வேளையில் அமெரிக்காவின் கேந்திரமுக்கியத்துவம் மிக்க உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது பெரும் பயங்கரவாதத் தாக்குதல் மேற்கொள்ளும் நோக்கோடு இரு விமானங்கள் தமது இலக்கை நோக்கிப் பறக்க ஆரம்பித்தன.

அமெரிக்க நாட்டுக்குள் வந்து, அமெரிக்காவுக்குச் சொந்தமான விமானத்தைக் கடத்திச் சென்று, அமெரிக்க நகரங்கள் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம், பெறுமதிமிக்க உயிர்கள், உடைமைகள் ஆகியவற்றுக்குச் சேதம் விளைவித்தமை நியாயமானதே என கருதும் கூட்டத்தினருக்கு அது நியாயப்படுத்தக்கூடிய காரணமாக இருக்கலாம். அவ்வாறே அது இளைஞர்களின் மிலேச்சத்தனமான செயலாகக் கருதப்படவும் இடமுண்டு.

பயங்கரவாதக் கடத்தல்காரர்களால் கடத்திச் செல்லப்பட்ட நான்கு விமானங்களில் இரு விமானங்களில் "லொஸ் ஏஞ்ஜல்ஸ்" நகரை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த 157 பயணிகள் அகப்பட்டுக் கொண்டனர். இவ்விரண்டு விமானங்களில் ஒன்று அமெரிக்க நேரம் காலை மணி 8.45இற்கு நியூயோர்க் வர்த்தக மையக் கட்டடத்தின் வடக்குப் புறக்கோபுரத்தில் மோதியதோடு, மற்றைய விமானம் சிறிது தாமதித்து காலை, மணி 09.06 இற்கு தெற்குப்புறக் கோபுரத்தின் மீது மோதி ஊடறுத்துச் சென்றது.

அதேசமயத்தில் வாஷிங்ரன் நகரில் அமைந்திருந்த அமெரிக்க பாதுகாப்புத்துறை தலைமையகமான 'பென்ரகன்' கட்டடம் மீது மற்றொரு விமானம் மூலம் தாக்குதல் மேற்கொள்ளும் வகையில் தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

இவ்வித உறுதிவாய்ந்த, கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியில் பேணப்பட்டுவந்த உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தி அதனை முற்றாகச் சேதமாக்க எவ்விதம் முடிந்ததென்பது விரிவாக ஆராயப்படவேண்டிய விடயமாகும். உலக வர்த்தக மையக்கட்டட அமைப்புக்கு உறுதியான பாதுகாப்பாய் அமைந்தவை அதனைச் சூழ அமைக்கப்பட்டிருந்த தூண்களாகும். சகல பிரிவுகளையும் இணைப்பதற்காக கட்டடத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த தூண்கள் சகல மாடிகளுக்குமான தொடர்புகளைப் பேணும்வகையிலும் அமைந்திருந்தன.

முதலாவது விமானம் மோதியதால் ஏற்பட்ட அதிர்வால் கட்டடத்தின் அடிபாகம் பலத்த சேதமுற்றதாயினும், முற்றாகத் தகர்ந்து விடுமளவு பாதிப்பாக அது அமையவில்லை. அவ்வாறாயின் அங்கு அமைந்திருந்த கோபுரம் எவ்விதம் தகர்ந்தது?

சம்பந்தப்பட்ட விமானத்தில்பெரிய அளவிலான எரிபொருள் சேமிக்கப்பட்டிருந்தமையால் தாக்குதலின் போது தீ பற்றிப் பரவியது. அத்தீயின் வெப்பத் தன்மையால் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாத கட்டடத்தின் உறுதி குலைந்தமையும், பற்றிப் பரவிய தீச்சுவாலை அலுவலக அறைகளிலிருந்த உபகரணங்கள், எழுது கருவிகள் ஆகியவற்றில் பற்றிக்கொண்டமையும் உஷ்ணம் அதிகரித்து இச் சோடிக் கட்டடங்கள் முற்றுமுழுதாகத் தகர்ந்து நிலத்தில் வீழ்ந்தமைக்கான காரணங்களாகின.

அவ்வேளையில், அப்பிரமாண்டமான கட்டடத்தில் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கட்டடத்திலிருந்து வெளியில்பாய முயன்றதாலும், அதிர்வின் காரணமாக வெளியில் தூக்கி வீசப்பட்டமையாலும் இவையெல்லாவற்றையும் விட அச்சமுற்று வெளியில் ஓடித் தப்ப முயற்சித்த வேளையில் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டமையாலும் அவர்களில் பலர் உயிரிழக்க நேரிட்டது. அவ்விதம் இறந்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்துக்கும் அதிகமாகுமெனத் தற்போது கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விதம் இடம்பெற்ற இநத பயங்கரவாத நடவடிக்கை காரணமாக உலகப் பிரசித்திபெற்ற அக்கட்டடம் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகியது. இப்போது வெறும் நிலம் மட்டுமே அங்கு எஞ்சியுள்ளது.

அமெரிக்க நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்திய இத்தாக்குதலின் பின்னணியில் 'ஒஸாமா பின்லேடன்' என்பவரே செயற்பட்டதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. 'அல்கெய்டா' என்ற பயங்கரவாத அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான 'ஒஸாமா பின்லேடனுக்கு' முன்னர் பெருமளவு நிதியையும் வேறு உதவிகளையும் அமெரிக்காவே வழங்கி வந்தது. அமெரிக்கா தான் பாலூட்டி வளர்த்தது பாம்பென்றே எனக் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டாது. ஆனால், அமெரிக்கா அந்த உண்மையை உணர்ந்து கொண்ட வேளையில் நடக்கவேண்டியதெல்லாம் நடந்தேறிவிட்டன. 'ஒஸாமா பின்லேடன்' தலிபான் பிரிவினைவாதக் குழுவின் தலைவரான 'ஒமர் முல்லா'வின் உதவியுடன் தனது பயங்கரவாத நடவடிக்கைகளை உலகம் பூராவிலும் நுட்பமான வகையில் விரிவுபடுத்திக் கொண்டார். நன்கு திட்டமிட்டவகையிலும், கிரமமான ஒழுங்கிலும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக உறுப்பினர்களைப் பயிற்றுவித்து உலகம் முழுவதிலும் அழிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டதன் மூலம் உலகைப் பயமுறுத்த முனைந்தார்.

இதன் காரணமாக, இப்பயங்கரவாதிகளின் முக்கிய தலைமையகமாகக் கருதப்பட்ட 'ஆப்கானிஸ்தான்' மீது அமெரிக்கா வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்களை ஒரே சமயத்தில் மேற்கொண்டது. எவ்வித போக்குவரத்து வசதிகளுமற்ற பிரதேசமான ஆப்கான் மீது நவீனரக ஆயுதங்களை உபயோகித்து தாக்குதல் மேற்கொண்டதன் மூலம், ஒரு காலத்தில் தலிபான் ஆட்சியாளர்களின் கட்டுப்பாடுகளால் கஷ்டத்துடன் வாழ்ந்து வந்த ஆப்கான் மக்கள் மீண்டும் சுதந்திரமாக வாழ்க்கை நடத்தும் நிலைமையை அமெரிக்கா உருவாக்கியது.

தங்களையறியாமலேயே ஆப்கான் மக்களுக்கு தற்போது சமாதானம் மற்றும் ஜனநாயகத்தின் மீது விருப்பம் ஏற்பட ஆரம்பித்துள்ளது. அன்று முக்காடிட்டு முகத்தை மறைத்து வாழ்ந்த 'ஆப்கான்' பெண்களுக்கு இன்று வாழ்க்கைச் சுமை நீங்கியுள்ளது. இது தம்மையறியாமல் அமெரிக்கா செய்த சிறப்பான நடவடிக்கை என்பதோடு அமெரிக்காவின் இந்நடவடிக்கை மூலம் அதன் புகழ் வியாபிக்க ஏதுவாயிற்று.

உலக வர்த்தகமையக் கட்டடத்தின் மீதான தாக்குதல்களை துரதிஷ்டச் சம்பவம் இடம்பெற்று இரண்டாண்டுகள் முடிவடையும் இவ்வேளையில், இந்த இடைப்பட்ட காலத்தில் பயங்கரவாதம் தொடர்பாக முழுஉலகமும கவனம் செலுத்தி வருவதோடு, அப் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடக் கூடிய வகையில் தம்மிடையே ஓர் இணைப்பையும் உலக நாடுகள் உருவாக்கிக் கொண்டன. கிலிகொள்ள வைத்த இத்தாக்குதல் இடம்பெற்ற ஓராண்டு பூர்த்தியை நினைவு கூர்ந்த வேளையில் நியூயோர்க் மற்றும் வாஷிங்ரன் ஆகிய நகரங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் கொல்லப்பட்ட 3000 இற்கு மேற்பட்ட பொதுமக்களை நினைவுகூரும் வைபவங்களிலெல்லாம் இவ்வித பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ள துரதிஷ்டவசமான அச்சுறுத்தல் பற்றியே நினைவுபடுத்தப்பட்டது.



அந்தவேளையில், அமெரிக்க ஜனாதிபதி புஷ் உறுதிமொழியொன்றினை நாட்டுமக்களுக்கு வழங்கினார். "எமது எதிரிகள் பெரும பலமும் திறமையும் கொண்டிருக்கக்கூடும். அதே போன்று அவர்கள் பெரும் நிதி வளம கொண்டவர்களாவும் விளங்கக்கூடும். அவர்களின் செயற்பாடுகளை நியாயமான விதத்தில் அடக்கி ஒழிக்க முடியாது விட்டால், அமெரிக்கா தனது சக்தி அனைத்தையும் பிரயோகித்து அவர்களது திட்டங்களை முறியடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்" என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். இதனையடுத்து தமக்கு எதிராக பயங்கரவாதிகளால் விடுக்கப்படும் பயமுறுத்தல்களை முறியடிப்பதற்காக உலக நாடுகள் அனைத்திலும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான திட்டத்துக்கு அனைத்து நாடுகளையும் இணைத்துச செயற்படும் திட்டமொன்றினையும் உருவாக்கினார் ஜனாதிபதி புஷ். இது ஒரு நீண்டகால முதலீடாகுமெனா இதனை ஜனாதிபதி புஷ் விவரித்துள்ளார்.

அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உலக வர்த்தக மையக் கட்டடம் அழிக்கப்பட்டபோதிலும், அதனை மீண்டும் கட்டி எழுப்பும் வரை அமெரிக்க மக்கள் ஆயிரம் எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கின்றனர். கோடிக்கணக்கான உலக மக்கள புதிய தொழில்நுட்பத்துடன் புதிய வடிவில் இக்கட்டடம் மீண்டும் உருவாக்கப்படும் என எதிர்பார்த்துள்ளனர். அழிக்கப்பட்ட அக்கட்டடம் இருந்த இடத்திலேயே சுதந்திர தூண் என்ற பெயரில் 1,776 அடி உயரமான கண்ணாடி இழைகளினால் தூணொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்க ஆட்சிபீடம் இறங்கியுள்ளது.

இப்பணிக்காக வடிவமைக்கப்பட்ட அமைப்பின் பிரகாரம் கட்டடத்தின் கீழ்ப்பகுதி காரியாலயத் தொகுதிகளுக்காக ஒதுக்கப்படும். இக்காரியாலயத் தொகுதிகளின் சுவர்களைக் கண்ணாடித் தகடுகளால் உருவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 70 மாடிகள் கொண்ட இக்கட்டடம் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் போது குறுகிச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கட்டடத்தின சகல மாடிகளும் படரும் பூச்செடிகளால் அழகு படுத்தப்பட்டு உயிரோட்டமான அழகுத் தோற்றமுடையதாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திர தூண் என அழைக்கப்படும் இவ்வியக்கத்தக்க பிரதான கட்டடத் தொகுதியில் மேலதிகமாக மேலும் நான்கு கோபுரங்கள் அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டடத் தொகுதியின் கீழ்ப் புறத்தில் தொல்பொருள் காட்சியகமொன்று அமையவுள்ளது. செப்ரெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதலில் உயிரிழந்தவர்களது நினைவாக நினைவு மண்டபமொன்றும் இப்பகுதியில் அமைக்கப்படும். அது ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம திகதியன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து விடப்படவுள்ளது.

இம்முக்கிய பிரிவுகளுக்கு மேலதிகமாக சுதந்திர தூண்களின் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் சென்று வரக் கூடிய வகையில் சுரங்கப்பாதை அமைக்கப்படும். இக்கட்டடம் அமைந்துள்ள பகுதியை சனசந்தடியற்ற அமைதிப் பிரதேசமாக உருவாக்குவதற்குத்தான் கடும் முயற்சியெடுப்பதாக "டானியல் லிபெஸ்கின்ட்" என்ற கட்டட நிர்மாணத்துடன் தொடர்புடைய நபர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இழந்த சுதந்திரத்தை மட்டுமன்றி இழந்த கௌரவத்தையும் கட்டிக் காப்பதற்காக இந்நிலையத்தை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க ஆட்சியாளர்கள் கவனம் செலுத்திவருகின்றனர். ஆகாயத் தாக்குதல்களினின்றும் பாதுகாப்பு தேடிக்கொள்ளும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ள இக் கட்டடம் எவ்வளவு தான் வியப்பையும் ஆச்சரியத்தையும் அளித்தபோதிலும் அமெரிக்கப் பொதுமக்களது மனதில் உருவான அவநம்பிக்கையையும் பயத்தையும் இதனால் போக்கிவிட முடியுமா என்பது விடை காண இயலாத வினாவாகும்.

அவ்விதமே இவ்வகையான கிலியூட்டும் தாக்குதல்களுக்கான பின்னணியாக சந்தேகிக்கப்படும் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாக அழிப்பதென்பது அமெரிக்கா எதிர்நோக்கியுள்ள சவாலாகும். ஆப்கானில் தலிபான் ஆட்சியாளர்களை அடக்கியது போன்று உலகம் பூராவிலும் பரவியுள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது அமெரிக்காவினால் எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பது சிந்தனைக்குரிய விடயம்.

**அரவிந்த்**

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதியளவில் அமெரிக்கா ஜனநாயகத்தின் பெயரால் ஈராக் நாடு மீது தாக்குதல் தொடுக்கத் தயாராகியிருந்தது. அமெரிக்கா தனது சுதந்திரம் பறிக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவை நினைவு கூரத்தயாரான இவ்வேளையில் ஈராக் மீதான தாக்குதல் மூலம் அதனை ஆக்கிரமித்து முடித்துள்ளது. இருந்த போதும் அமெரிக்காவினால் இன்று வரையில் சதாம் ஹுசைனைக் கைது செய்ய முடியவில்லை.உலக பொலிஸ்காரனாக மேடையில் நடிக்கும் அமெரிக்கா இன்றைய செப்ரெம்பர் 11 தினத்துக்குப் பின்னர் தன் நாடகத்தை எங்கு அரங்கேற்றத் திட்டமிடுகிறது என்பது தெரியவரவில்லை. இருந்தபோதும், தமது சுதந்திரத்தின் நிலையத்தை பேணுவதை விட பலம் வாய்ந்த கண்ணாடி இழைகளால் அதனை உருவாக்குவதற்கான சகல நடவடிக்கைகளிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

புதியதாக நிர்மாணிக்கப்படும்

(8ஆம் பக்கம் பார்க்க)

111 வது கிளை



# நெல்லியடி

இயற்கைச் செழுமையுள்ள, கனிகள் தரும் மரங்கள் கொண்ட பிரதேசமே நெல்லியடி!

முன்னைய காலத்தில் இந்தப் பிரதேசத்திலே பெரிய நெல்லிமரம் ஒன்று இருந்தது. பெருநிழல் தந்த இந்த மரத்தின் கீழ் வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறுவார்கள். இதனால், இதை ஒட்டியதாய் சிறு சிறு நடைபாதை வியாபாரம் ஆரம்பமாகியது. காலம் செல்ல மெல்ல இப்பகுதி, மக்கள் தங்கி வாழும் பெரிய குடியேற்றப் பிரதேசமாகவும் ஆகிற்று.

கடும் உழைப்பாளிகள் வாழும் வடமராட்சிப் பகுதியில் உள்ள இந்தப் பகுதிக்கு "நெல்லியடி" என்ற காரணப்பெயர் நிலையாக அமைந்துவிட்டது.

கடும் உழைப்பாளிகளான உங்களின் வங்கித் தேவைகளுக்கு உதவ நாமும் வந்துவிட்டோம்.

**கொமர்ஷல் வங்கி**
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

கொமர்ஷல் வங்கியின் 111வது கிளை வைபவரீதியாக நெல்லியடியில், 2003 செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை காலை 9.47 மணிக்கு, இல. 333, பொன்னையா கட்டடம், மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடியில் திறந்து வைக்கப்படுகிறது. இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி: 021 2263785 (முகாமையாளர்)
021 2263786-7 (பொது) ∴பெக்ஸ்: 021 2263788

Ogilvy Outreach